# ශ්‍රී ලංකා කජු සංස්ථාව

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

# SRI LANKA CASHEW CORPORATION

## වාර්ෂික වාර්තාව සහ ගිණුම්

## வருடாந்த கணக்கும் அறிக்கையும்

# ANNUAL REPORT AND ACCOUNTS

# 2016

<u>உள்ளடக்கம்</u> <u>பக்க இல</u>

| | | |
|---|---|---|
| 1. | தவிசாளரது செய்தி | 1-20 |
| | ♦ கூட்டுத்தாபனத்தின் நோக்ககூற்று, பணிக்கூற்று, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள். | |
| | ♦ பணிப்பாளிரினதும் சிஷேட முகாமைத்துவத்தினரின் சுருக்க முகக்குறிப்பு | |
| 2. | பணிப்பாளர்களின் செய்தி | 21-24 |
| 3. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை | 25-27 |
| 4. | செயலாற்றுகை அறிக்கை | 28-31 |
| 5. | மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்ததாபனத்தினால் அமுல்படுத்தபட வேண்டிய இடைக்கால உபாயங்கள் | 32-38 |
| 6. | கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் | 39-57 |
| 7. | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவு நியதிகளின் படி நிதியியல் கூற்று மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 58-73 |
| 8 | **கணக்காய்வாளர்** நாயகத்தின் அறிக்கையில குறிப்பிடப்பட்ட செயறபாடுகளின் நடவடிக்கை | 74-88 |
| 9. | முன்னெடுக்கப்படும் 5 ஆண்டு கால நிதியியல் சிறப்பு கூறுகள் | 89 |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

### 2016 ஆம் ஆண்டிற்குரிய தலைவரின் அறிக்கை

**(01) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தாபிப்பு**

1973 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி இடப்பட்டதும் 60/07 எனும் இலக்கத்தை உடைய அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவுற 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது. கூட்டுத்தாபனமானது அது தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்து ஒரு பொது வியாபார முயற்சியாக செயற்படுகின்றது. இலாபத்தை உழைக்கும் அடிப்படையில் வர்த்தக ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடும் அதே வேளையில் கூட்டுத்தாபனமானது பிரதானமாக கைத்தொழிற்துறைக்கு தமது சேவைகளை வழங்குகின்றது.

- **நோக்கு**

  உயர் தரமான மரமுந்திரிகைகளை உற்பத்தி செய்வதனூடாக உலகில் மரமுந்திரிகை ஏற்றுமதி செய்யும் தலை சிறந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையை ஆக்குதல்.

- **செயற்பணி**

  மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, அதன் உற்பத்தி, செயன்முறை தொழில்நுட்பம், பெறுமான சேர்ப்பு, ஆராய்ச்சி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் தொடர்புடைய நபர்களுக்கு தொழில்சார்பியல் வழிகாட்டல்களை வழங்குவதனூடாக நீண்ட காலத்திற்கு வர்த்தக ரீதியில் செயலூட்டல் திறனை உறுதிபடுத்தும் வகையில் மரமுந்திரிகை கைத்தொழிற்துறையின் தரத்தினை உயர்த்துதல்.

**இலக்குகள்**

- மரமுந்திரிகை பயிர்ச்செய்கை பகிர்வதற்கூடாக மரமுந்திரிகை பயிற்சியை மேம்படுத்துதல்.
- மரமுந்திரிகை செயன்முறையில் ஈடுபடும் கைத்தொழிற்துறைகள் மற்றும் தோட்டத்துறைகளின் உற்பத்தியை மேம்படுத்தல்.
- இலங்கை மரமுந்திரிகைகளுக்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு வியாபார முத்திரையை உருவாக்குதல்.
- புதிய உற்பத்திகளுக்கு பெறுமானத்தை சேர்த்தலும் அவற்றை விருத்திசெய்தலும்.
- மரமுந்திரிகை ஏற்றுமதியை ஊக்கப்படுத்தல்.
- மரமுந்திரிகை உற்பத்தியில் இலங்கையில் தலைசிறந்ததொரு நாடாக்குதல்.
- இலாபம் உழைப்பதனூடாக சுய தேவையை பூர்த்திசெய்யக்கூடிய ஒரு அரச நிறுவனமாகுதல்.

**குறிக்கோள்கள்**

(அ) மரமுந்திரிகை பயிர்ச்செய்தல், செயன்முறையாக்கம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலுடன் மரமுந்திரிகையின் உற்பத்தி, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பில் திட்டங்களை முறைவடிவமாக்கம் செய்தலும் அவற்றின் அமுல்படுத்துகைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கலும்.

(ஆ) மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பிலும் மற்றும் அவற்றின் உற்பத்தி செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பிலுமான குறிக்கோள்களை மேம்படுத்தும் வகையில் பரிசோதனைகளையும் ஆராய்ச்சிகளையும் முன்னெடுத்தல்.

(இ) மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துகை அத்துடன் அவற்றின் உற்பத்தி, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துகை என்பவை தொடர்பில் தொழில்நுட்பவியல் சந்தைப்படுத்துகை மற்றும் ஏனைய தகவல்களை சேகரித்தல், பரிசோதித்தல் மற்றும் விநியோகித்தலுடன் இந்நடவடிக்கைகளின் அமுல்படுத்துகை தொடர்பில் ஏனையவர்களுடன் தொடர்பிணைப்பை ஏற்படுத்தல்.

(ஈ) மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி செயன்முறை ஆலைகளின் இட அமைவு, அவைகளின் விஸ்தீரண மற்றும் தொழில்நுட்பவியல் கட்டளைகளை தீர்மானித்தலும் புதிய ஆலைகளை தாபித்தலும் மற்றும் தேவை ஏற்படும்போது இருக்கின்ற ஆலைகளை செயற்பட செய்தல்.

(உ) மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை கொள்வனவு செய்தல், விநியோகித்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல்.

(ஊ) மரமுந்திரிகை உற்பத்தி, செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் ஆளணிகளை பயிற்றுவித்தல்.

(எ) மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துகை விருத்திக்கு தேவைப்படும் அடிப்படை அமைப்பாண்மைகளை தாபித்தலும் மற்றும் அத்தகைய தாபிப்பிற்கு உதவியாக இருத்தலும்.

(ஏ) மரமுந்திரிகை உற்பத்தி மற்றும் அவற்றின் விற்பனையை பிரபல்யப்படுத்தக்கூடிய வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் தற்போது இந்த உற்பத்திக்கு உலக சந்தையில் தற்போது இருக்கும் கேள்வியினை மேம்படுத்தல், உற்பத்திகளின் மேம்படுத்துகை அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நிதியீடு செய்தலும் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல், துணையாக இருத்தல் மற்றும் அனுசரனை செய்தல்.

**(02) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை-2016**

**(2.1) 2016.01.01 இலிருந்து 2016.02.23 வரைக்குமான காலப்பகுதிக்கு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| **(i)** | **திரு. டி. பி. கருணாரட்ன** | **- தலைவர்** |
| (ii) | திரு. எம்.டபிள்யூ.எம். பண்டாரதிலக | - பிரதி தலைவர் |
| (iii) | திரு. ஆர்.கெ. ஜயலத் | - பணிப்பாளர் சபை, உறுப்பினர் (பொது திறைசேரியின் பிரதிநிதி) |
| (iv) | திரு. எம்.ஆர்.எம்.ஐ. ரிசா | - பணிப்பாளர் சபை, உறுப்பினர் |

(v) திரு. வி. மன்சநாயக - பணிப்பாளர் சபை, உறுப்பினர்

**(2.2) 2016.02.24 இலிருந்து நியமனம் செய்யப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

**(i) திரு. டி. பி. கருணாரட்ன - தலைவர்**

(ii) திரு.எம்.டபிள்யூ.எம்.பண்டாரதிலக - பிரதி தலைவர்

(iii) திரு. ஆர்.கே. ஜயலத் - பணிப்பாளர் சபை, உறுப்பினர் (பொது திறைசேரியின் பிரதிநிதி) (2016.04.27 வரையில்)

(iv) திருமதி. ஏ.ஏ.டி.எஸ். அதபது - பணிப்பாளர் சபை, உறுப்பினர் (பொது திறைசேரியின் பிரதிநிதி) (2016.05.26 இலிருந்து)

(v) திரு. எம்.ஆர்.எம்.ஐ. ரிசா - பணிப்பாளர் சபை, உறுப்பினர்

(vi) திரு. வி. மன்சநாயக - பணிப்பாளர் சபை, உறுப்பினர்

(vii) திரு. கெ. லிங்கராஜா - பணிப்பாளர் சபை, உறுப்பினர்

(viii) திரு. ஏ.எஸ்.எம். பஸ்மி - பணிப்பாளர் சபை, உறுப்பினர்

2016 ஆம் ஆண்டிற்குரிய பணிப்பாளர் சபை செயலாளர் திரு. வி.யு. லியனகே (2016.03.30 வரையில்)

திரு. கீர்த்தி ஜயகொடி ஆராய்ச்சி பொது முகாமையாளர் (2016.04.27 இலிருந்து)

**(2.3) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு – 2016**

(i) திரு. ஆர்.கே. ஜயலத் - செயற்குழு தலைவர் உறுப்பினர், பணிப்பாளர் சபை - பொது திறைசேரி பிரதிநிதி (2016.04.28 வரையில்)

(ii) திருமதி. ஏ.ஏ.டி.எஸ். அதபது - செயற்குழு தலைமைத்துவம் உறுப்பினர், பணிப்பாளர் சபை-பொது திறைசேரி பிரதிநிதி (2015.06.23 இலிருந்து)

(iii) திரு. வி. மன்சநாயக்க - செயற்குழு உறுப்பினர் உறுப்பினர், பணிப்பாளர் சபை

(iv) திரு. எம்.ஆர்.எம்.ஐ. றிசா - செயற்குழு உறுப்பினர் உறுப்பினர், பணிப்பாளர் சபை

(v) திரு. வீ.யு. லியனகே - செயற்குழு செயலாளர் உதவி பொது முகாமையாளர்-உள்ளக கணக்காய்வு (2015.03.30 வரையில்)

(vi) திரு. டி.கே. ஜயகொடிஆராச்சி - செயற்குழு செயலாளர் பொது முகாமையாளர் (2015.04.28 இலிருந்து)

(vii)திரு. பீ.பி. கொடிகார - செயற்குழு உறுப்பினர் பிரதி பொது முகாமையாளர் (2015.09.21 வரையில்)

(viii)திரு. எம்.டி.எஸ்.கே. பீரிஸ் - செயற்குழு உறுப்பினர் உதவி பொது முகாமையாளர் – நிதி (2015.09.21 வரையில்)

**(2.4) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் சிரேட்ட முகாமைத்துவம் – 2016**

(i) திரு. டி.கே. ஜயகொடிஆராச்சி - பொது முகாமையாளர்

(ii) திரு. பீ.பி. கொடிகார - பிரதி பொது முகாமையாளர்

**(2.5) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ சபை**

(i) திரு. எம். டி. எஸ். கே. பீரிஸ்- உதவி பொது முகாமையாளர் – நிதி

(ii) திரு. ஜி. பி. பி. சுரேந்ரா - உதவி பொது முகாமையாளர் – விஸ்தரிப்பு மற்றும் ஆராய்ச்சி

(iii) திரு. வி. யூ. லியனகே - உதவி பொது முகாமையாளர் – உள்ளக கணக்காய்வாளர்

(iv) திரு. ஆர். எம். பி. ஜயதிஸ்ச- உதவி பொது முகாமையாளர் – சந்தைபடுத்துகை மற்றும் செயன்முறை

(v) திரு. பீ. எம். ஏ. பீ. கே. விஜெதுங்க- உதவி பொது முகாமையாளர் – தோட்டத்துறை

**(2.6) பதிவு செய்யப்பட்ட அலுவலகங்கள்**

**தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம்**

**தலைமை அலுவலகம்**

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், இல: 1334, பழைய கோட்டை வீதி, ராஜகிரிய.

**தொலைபேசி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | 011 2 871 005 |
| பிரதி தலைவர் | - | 011 2 869 844 |
| பொது முகாமையாளர் | - | 011 2 876 134 |
| தொலைமடல் | - | 011 2 867 843 |
| மின்-அஞ்சல் | - | cashewco@dialogsl.net |
| வலைதள பீட விலாசம் | - | www.cashew.lk |

**பிராந்திய அலுவலகங்கள், தோட்டத்துறை, பயிர் வளர்ப்பு நிலையங்கள் மற்றும் செயன்முறை அலகுகள்**

| (2.7) | <u>பிராந்திய அலுவலகங்கள்</u> | <u>உள்ளடக்கப்படும் மாவட்டங்கள்</u> |
|---|---|---|
| | 1. புத்தளம் பிராந்திய அலுவலகம் | - புத்தளம் / குருநாகல் |
| | 2. அம்பாந்தோட்டை பிராந்திய அலுவலகம் | - அம்பாந்தோட்டை / இரத்தினபுரி |
| | 3. அனுராதபுரம் பிராந்திய அலுவலகம் | - அனுராதபுரம் / வவுனியா /மன்னார் / முல்லைத்தீவு |
| | 4. நாலந்தை பிராந்திய அலுவலகம் | - மாத்தளை / பொலன்நறுவை |
| | 5. மொனராகலை பிராந்திய அலுவலகம் | - மொனராகலை |
| | 6. மஹியங்கன பிராந்திய அலுவலகம் | - கண்டி / பதுளை |
| | 7. அம்பாறை பிராந்திய அலுவலகம் | - அம்பாறை |
| | 8. மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் | - மட்டக்களப்பு / திருகோணமலை |
| | 9. கிளிநொச்சி பிராந்திய அலுவலகம் | - கிளிநொச்சி / முல்லைத்தீவு /ழ்ப்பாணம் |
| | 10. மன்னார் பிராந்திய அலுவலகம் | - வவுனியா / மன்னார் |

| (2.8) | <u>தோட்டத்துறைகள்</u> | <u>மாவட்டங்கள்</u> |
|---|---|---|
| | 1. கமன்டலுவ தோட்டத்துறை | - புத்தளம் |
| | 2. புத்தளம் ஆச்சிகேவத்த தோட்டத்துறை | - புத்தளம் |
| | 3. எழுவாங்குளம் தோட்டத்துறை | - புத்தளம் |
| | 4. ஹார்டி தோட்டத்துறை | - மட்டக்களப்பு |
| | 5. மாங்கேணி தோட்டத்துறை | - மட்டக்களப்பு |

6. கொண்டாச்சி தோட்டத்துறை- மன்னார் (அரச தனியார் இணை கருத்திட்டத்தினூடாக ருத்திசெய்யப்படுகின்றது.)

7. பூணரின் தோட்டத்துறை - கிளிநொச்சி (இராணுவத்தினால் தப்படுகின்றது.)

8. மது தோட்டத்துறை - மன்னார்–(பயிர் புணருத்தாரனம் செய்யப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.)

9. ஒயம்மதுவ தோட்டத்துறை - அனுராதபுரம்

| | | |
|---|---|---|
| (2.9) | **<u>பயிர் வளர்ப்பு நிலையங்கள்</u>** | **<u>மாவட்டம்</u>** |
| | 1. விலாச்சியா பயிர் வளர்ப்பு நிலையம் | - அனுராதபுரம் |
| | 2. நாளந்தா பயிர் வளர்ப்பு நிலையம் | - மாத்தளை |
| | 3. மஹா ஓயா பயிர் வளர்ப்பு | - அம்பாறை |
| | 4. சுதுவதுரஅர பயிர் வளர்ப்பு நிலையம் | - மொனறாகலை |

| | | |
|---|---|---|
| (2.10) | **<u>மத்திய பயிர் பண்ணை</u>** | **<u>உள்ளடக்கப்பட்ட பரப்பெல்லைகள்</u>** |
| | 1. மிஹிந்தலை செடி பண்ணை | - அனுராதபுரம் / வவுனியா / மன்னார் / கிளிநொச்சி / முல்லைத்தீவு |
| | 2. ம்புள்ள செடி பண்ணை | - மாத்தளை / பொலநறுவை |
| | 3. கமண்டலுவ செடி பண்ணை | - புத்தளம் / குருநாகல் |
| | 4. ஹார்டி செடி பண்ணை | - மட்டக்களப்பு / திருகோணமலை |
| | 5. கும்புக்கான செடி பண்ணை | - மொனறாகலை |
| | 6. அலுத்தரம செடி பண்ணை | - பதுளை / கண்டி |
| | 7. சந்திரிக்கா வெவ செடி பண்ணை | - அம்பாந்தோட்டை / இரத்தினபுரி |

| | | |
|---|---|---|
| (2.11) | **<u>ரமுந்திரிகை செயன்முறை நிலையங்கள்</u>** | **<u>மாவட்டம்</u>** |
| | 1. நெதகமுவ செயன்முறை நிலையம் - | கம்பஹா |
| | 2. புத்தளம் செயன்முறை நிலையம் - | புத்தளம் |

| | | |
|---|---|---|
| (2.12) | **<u>ஆராய்ச்சி அலகுகள்</u>** | **<u>மாவட்டம்</u>** |
| | 1. கமண்டலுவ ஆராய்ச்சி நிலையம் - | புத்தளம் |
| | 2. புத்தளம் ஆராய்ச்சி நிலையம் - | புத்தளம் |

**இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிரதான இணை ஆராய்ச்சி கூட்டிணைவு**

வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்டத்துறை முகாமைத்துவ பீடத்தின் கல்விசார் பதவியணியினருடன் இணைந்தே, கூட்டுத்தாபனத்தினால் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களாவன முன்னெடுக்கப்படுகின்றன.

**(2.13) <u>கூட்டுத்தாபனத்தின் விற்பனை சாவடிகள்</u> <u>மாவட்டம்</u>**

1. இல. 1334, பழைய கோட்டை வீதி, இராஜகிரிய - கொழும்பு
2. இல. 518, காலி வீதி, கொழும்பு - 03 - கொழும்பு
3. யானைகள் சரணாலய வளாகம், பின்னவல - பின்னவல

**(2.14) கூட்டுத்தாபனத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட மரமுந்திரிகை விற்பனை சாவடிகள்**

1. ரந்தியா ப்ரூட் அன்ட் நட், பியகல, மக்கொனா.
2. சுனிலா க்ரோசரி, இல. 35, புதிய வீதி, அம்பலாங்கொடை.
3. P & J சிட்டி, காமினி மாவத்தை, காலி.
4. பிரெஸ் பாம் சொப், காலி வீதி, ஹிக்கடுவ.
5. தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, நாரஹேன்பிடி.
6. தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, வெலிசர.
7. ரஞ்சனாஸ் 7 மாடி, இல. 318, காலி வீதி, கொழுமபு – 04.
8. ஆனந்த புட் சிட்டி, இல. 272, அன்குருவத்தொட வீதி, ஹொரனை.
9. பாணந்துறை கூப் சிட்டி, வரையறுக்கப்பட்ட பன்துர மல்ட்டி சர்விஸ் கூட்டுத்தாபனம் சங்கம், ஜனாபிடிய மாவத்தை, பன்துர.
10. புதிய அமெரிக்கன் சிக்கன் ஹட், 16, சாரணந்த மாவத்தை, களுத்தரை.
11. சம்பத் பாமசி மற்றும் க்ரோசரி, இல. 39 இ, மாதர வீதி, அகுரஸ்ச.
12. சியும் புட் உற்பத்திகள் இல.499, பிரதான வீதி, கேகாலை
13. வரையறுக்கப்பட்ட யடிநுவர கங்கபலாத பல் சேவை கூட்டுத்தாபனம் – பொல்கஹமுல்ல சந்தி, பேராதெனிய.
14. வரையறுக்கப்பட்ட யடிநுவர மடபலாத பல் சேவை கூட்டுத்தாபனம் - அம்பிளிமீகம, பிலிமிதலாய.

15. வரையறுக்கப்பட்ட மத்திய மாகாண பல் சேவை கூட்டுத்தாபனம் - எஹலபொல குமாரி ஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி.
16. வரையறுக்கப்பட்ட பூஜாபிடிய பல் சேவை கூட்டுத்தாபன சங்கம்.
17. வரையறுக்கப்பட்ட அரிஸ்பதுவ வடக்கு பல் சேவை கூட்டுத்தாபன சங்கம் – மாத்தளை வீதி, அலவதுகொட.
18. வரையறுக்கப்பட்ட குண்டசாலை பல் சேவை கூட்டுத்தாபன சங்கம் – மனிக்ஹின்ன.
19. வரையறுக்கப்பட்ட கண்டி பல் சேவை கூட்டுத்தாபன சங்கம், கோப்சிட்டி, பல்லேகல.
20. வரையறுக்கப்பட்ட கண்டி பல் சேவை கூட்டுத்தாபன சங்கம், கோப்சிட்டி, மாத்தளை.
21. வரையறுக்கப்பட்ட கண்டி பல் சேவை கூட்டுத்தாபன சங்கம், கோப்சிட்டி, லகல.
22. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கம், இல. 21, காலி வீதி, தெஹிவளை.
23. உடம்சா பால் சபை, 978 D 3, பன்னிபிடிய வீதி, பெலவத்தை.
24. பனை அபிவிருத்தி சபை, காலி வீதி, பம்பலப்பிட்டி.
25. பனை அபிவிருத்தி சபை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்.
26. பனை அபிவிருத்தி சபை, நல்லூர் கோவில் அருகில், யாழ்ப்பாணம்.
27. பனை அபிவிருத்தி சபை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
28. பனை அபிவிருத்தி சபை, பிரதான வீதி, வவுனியா.
29. ஒன் ரோ பாமசி, இல. 25, நாகொட வீதி, கட்டுகுருந்த.
30. கோல்டன் மெய்ட், 144, காலி வீதி, அஹங்கம.
31. நியூ மோனிஸ் பேக்கரி, காலி வீதி, மக்கன.
32. கண்டி லய்ன்ஸ், பார்க் வீதி, கேகாலை.
33. சாகர பேக்கர்ஸ், அங்குருவாதோட வீதி, ஹொறன.
34. ரோய் குரசரி, மதுகம வீதி, கடுகுருந்தா சந்தி, களுத்துறை.
35. ஹரிஸ்சந்திரா ஆலை, டெல்பொட் வீதி, காலி.
36. ஜெ. எப். டுவர்ஸ் மற்றும் டிரவல்ஸ், ஜாவத்தை வீதி, பம்பலப்பிட்டி.
37. கொழும்பு கிரிக்கெட் கழகம், மெய்ட்லன்ட் கிரசன்ட், கொழும்பு 07.
38. எப்கோ மினி மார்ட், பிரதான வீதி, மாவனெல்ல.
39. லயன் குரசரி, மகுன்புர, பன்னிபிடிய வீதி, கொட்டாவ.
40. டி ஜி எம் விவசாய திணைக்களம், மாத்தளை.
41. அபயகுணவர்தன ஸ்டோர்ஸ், தெனியாய.
42. தலகல ஸ்டோர்ஸ், தலகல.
43. கோப் சிடி, குண்டசாலை.
44. செப்கோ சுப்பர், போகம்பர.

45. டி ஜி எம் விவசாய திணைக்களம், காலி.

46. பனோரமா சய்னீஷ் போசன சாலை, கொட்டாவ.

47. நமுனுகுல பால்சாலை, வத்தளை.

48. மாஸ்டர் சொப்பர், கொழும்பு – 01.

49. ருஹுணு ரசர, மாத்தறை. ருஹுணு ரசர, லபுதோவ,

50. பயவர்த்தன ஸ்டோர்ஸ், தெனியாய.

**(2.15)** **<u>சுற்றுலா பங்களாக்கள்</u>** **<u>மாவட்டம்</u>**

1. புத்தளம் சுற்றுலா பங்களாக்கள் - புத்தளம்
2. ஹார்டி சுற்றுலா பங்களாக்கள் - மட்டக்களப்பு


## (03) கூட்டுத்தாபனத்தின் விருத்தி நடவடிக்கைகள்

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் விருத்தி நடவடிக்கைகள் என்ற அடிப்படையில் 65 பிரதான நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துகை செய்கின்றது.

1. விஸ்தரிப்பு மானிய நிகழ்ச்சித்திட்டம்
2. தோட்டத்துறை விருத்தி, புனருத்தாரனம், உற்பத்தி விருத்தி
3. சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறை அபிவிருத்தியில் விருத்தி
4. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

## (3.1) விஸ்தரிக்கப்பட்ட மானிய நிகழ்ச்சித்திட்டம்

### (3.1.1) இலங்கையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையின் ஆக்கக்கூறுகள்




**ஏனைய கருத்திட்டங்கள்**

D.E.C.U - ‘திவி நெகும’ பொருளாதார பயிர்ச்செய்கை அலகுகள்

E.D.U.C.P.P - பணம் அரிதாய் உள்ள கருத்திட்டங்களை சார்ந்த குடும்பங்களின் பொருளியல் விருத்தியும் மேம்பாடுகளும்

R.E.D.P - பிராந்திய பொருளியல் அபிவிருத்தி கருத்திட்டங்கள் – மாத்தளை மாவட்டம்

U.R.R.D - மலைநாட்டு கிராமிய புணருத்தாரன திணைக்களத்துடன் இணைக்கருத்திட்டம்

**(3.1.2.)** **மரமுந்திரிகை பயிர்ச்செய்கை நிலங்களை விஸ்தரித்தலும் தேசிய உற்பத்தியை அதிகரித்தலும்**

**(3.1.2.1)** **பயிர்ச்செய்கை நிலப்பரப்பை அதிகரித்தல்**

இலங்கையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை செய்யப்படும் மொத்த நிலப்பரப்பு 142608 ஏக்கர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 125 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கிய 18 மாவட்டங்களின் மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒட்டு மரமுந்திரிகை பயிர்ச்செய்கை நிலப்பரப்பானது 2500 ஏக்கர் நிலப்பரப்பாகவும் விதை நாற்றங்கால் முறையில் பயிர்ச்செய்கை செய்யப்பட்ட நிலப்பரப்பு 2000 ஏக்கர்கள் ஆகும். இதன் கீழ் 3298 குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன.

**மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மானிய நிகழ்ச்சித்திட்டம்**

| மாவட்டம் | ஒட்டு மரமுந்திரிகை கன்றுகள் (ஏக்கர்கள்) | மரமுந்திரிகை நாற்றுக்கள் (ஏக்கர்கள்) |
|---|---|---|
| 1. புத்தளம் | 400 | - |
| 2. குருநாகல் | 300 | - |
| 3. அம்பாந்தோட்டை | 200 | - |
| 4. அனுராதபுரம் | 550 | - |
| 5. அம்பாறை | - | 400 |
| 6. பதுளை | 150 | - |
| 7. கண்டி | 25 | - |
| 8. இரத்தினபுரி | 25 | - |
| 9. மாத்தளை | 150 | - |
| 10. பொலன்நறுவை | 150 | - |
| 11. மொனறாகலை | 250 | - |
| 12. மட்டக்களப்பு | 50 | 350 |
| 13. திருகோணமலை | 50 | 300 |
| 14. வவுனியா | 50 | 200 |
| 15. மன்னார் | 25 | 250 |
| 16. முல்லைத்தீவு | 75 | 300 |
| 17. கிளிநொச்சி | 50 | 150 |
| 18. யாழ்ப்பாணம் | - | 50 |
| **மொத்தம்** | **2500** | **2000** |

**(3.1.2.2) மர முந்திரிகை மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான மானிய கொடுப்பனவுகள்**

மரமுந்திரிகை மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒட்டு மரமுந்திரிகை அடிப்படையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய். 9500.00 மானியமாக வழங்கப்பட்ட அதே வேளையில் விதை நாற்றங்கால் அடிப்படையிலான பயிர்ச்செய்கைக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய். 3500.00 மானியமாக வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் இப்பணிக்காக வழங்கப்படும் இத்தொகை அறவே போதுமானதாக அல்ல. மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இருக்கும் விவசாயிகளில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு பயிர்செய்கை தொடர்பில் பயிற்சியும் விஸ்தரிப்பு சேவைகளும் தற்போது வழங்கப்படுகின்றன. அத்துடன் பயிர்செய்கை நிலப்பரப்பின் விஸ்தீரணத்தைப் பொறுத்து ஒட்டு மரமுந்திரிகை தாவரங்கள் மற்றும் விதை நாற்றங்கால்கள் என்பன இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளாவன கூட்டுத்தாபனத்தின் 10 பிராந்திய அலுவலகங்களினூடாக 18 மரமுந்திரிகை மாவட்டங்களில் அமுல்படுத்தப் படுகின்றன.

**(3.1.2.3) விஸ்தரிப்பு சேவைகளை விரிவடையச் செய்தல்**

விஸ்தரிப்பு சேவைகளை விரிவாக்கும் நோக்குடன், மன்னார் மாவட்டத்திற்காக ஒரு பிராந்திய அலுவலகம் தாபிக்கப்பட்டதுடன் இது மன்னார் மற்றும் வவுனியா ஆகிய இரு மாவட்டங்களினதும் செயற்பாடுகளை நோக்கும் வகையில் தாபிக்கப்பட்டது.

**(3.2) தோட்டத்துறை விருத்தி, புணருத்தாரனம் மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி**

**(3.2.1) மரமுந்திரிகை பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்**

**(3.2.1.1) நடுகை திரவியங்களின் உற்பத்தி**

சிறந்த விவசாய செயன்முறைகளைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்தின் செடி வளர்ப்பு நிலையங்களிலிருந்து 13.91 மெட்ரிக்தொன் தாய் விதைகள் பெறப்பட்டதுடன் இந்த தாய் விதைகளிலிருந்து 264000 சின்னஞ்சிறு தளிர்கள் பெறப்பட்டதுடன் இந்த தாய் கன்றுகள் ஒட்டு மரமுந்திரிகை கன்றுகள் மற்றும் விதை நாற்றங்கால் உற்பத்திகளில் பயன்டுத்தப்பட்டது.

| பயிர் வளர்ப்பு நிலையம் | மாவட்டம் | விஸ்தரிக்கப்பட்ட பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|
| 1. விலாச்சிய | அனுராதபுரம் | 25 |
| 2. நாளந்த | மாத்தளை | 75 |
| 3. மஹஓயா | அம்பாறை | 81 |
| 4. சுதுவதுரஅர | மொனறாகலை | 50 |
| **மொத்தம்** | | 231 |

(3.2.1.2) **செடிப் பண்ணை முகாமைத்துவம்**

கூட்டுத்தாபனத்தின் மத்திய செடிப் பண்ணையில் உயர்த்தரமான மற்றும் புதிய வகையினைச் சார்ந்த 209125 ஒட்டு மரமுந்திரிகை செடிகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் அவை 'திவி நெகும' மற்றும் மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிரப்பட்டன.

**2016 ஆம் ஆண்டில் ஒட்டு மரமுந்திரிகை செடிகளின் உற்பத்தி**

| செடிப் பண்ணையின் பெயர் | உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டுத் தாவரங்கள் |
|---|---|
| 1. கமந்தலுவ | 38602 |
| 2. தம்புள்ளை | 29768 |
| 3. மிஹின்தல | 79846 |
| 4. அளுத்தாரம | 19044 |
| 5. கும்புக்கம | 18701 |
| 6. ஹர்டி | 7401 |
| 7. சந்திரிக்கா வெவ | 15763 |
| **மொத்தம்** | **209125** |

மானிய திட்டத்திற்குத் தேவையான 78500 நாற்றங்கால்களை உற்பத்தி செய்யும் பொருட்டு மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் 46 செடிப்பண்ணைகள் தாபிக்கப்பட்டன.

(3.2.1.3) **தோட்டத்துறைகளில் புதிய பயிர்ச்செய்கை**

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் புத்தளம், கமண்டலுவ, எழுவாங்குளம், ஹார்டி, ஒயம்மதுவ, மாங்கேணி மற்றும் மட்டக்களப்பு ஆகிய தோட்டத்துறைகளில் விரிவான அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையின் போது குறிப்பாக வடமாகாணத்தினை சார்ந்த கொண்டாச்சி தோட்டத்துறை கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த மாங்கேணி தோட்டத்துறை ஆகிய தோட்டத்துறைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின்போது சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

தொழில்நுட்பவியல் உதவி மற்றும் பயிர்ச்செய்கைக்கான மரமுந்திரிகை செடிகள் என்பன கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் கொண்டாச்சி தோட்டத்துறைக்குள் 150 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பயிர்ச்செய்கைக்கு நிலத்தை தயார் பண்ணி 100 ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை செடிகளை நடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பூனேரிம் தோட்டத்துறையானது இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் செயற்படுவதுடன் இந்த தோட்டத்துறையினை பேணல் தொடர்பிலான அறிவுரைகளாவன தொடர்ந்தும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுவருவதுடன் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானதும் 2000 ஏக்கர்களைக் கொண்டதுமான முதிர் மரமுந்திரிகை பயிர் செய்கை நிலப்பரப்பில் புனருத்தாரண பணிகள் செய்யப்பட்டதுடன் இரசாயன பசளைகள் இரசாயன கிருமிக் கொல்லிகளும் இத்தோட்டத்துறைக்கு வழங்கப்பட்டன.

### (3.2.1.4) உற்பத்தி திறனை மேம்படுத்தல்

மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை தாக்கக்கூடிய பூச்சிகளை நாசம் பண்ணவும் அதற்கேற்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாக்கவும் அத்துடன் சிறந்த விவசாய செயன்முறைகளினை சேர்ப்பதன் மூலம் (GAP) உற்பத்தி திறனை மேம்படுத்தவும் ஒரு புதிய இரசாயன கலவை அறிமுகப்படுத்தப்பட்டு பரிசோதித்துப் பார்க்கப்பட்டதுடன் அதற்கான பெறுபேறும் வெற்றிகரமாக அமைந்தது. இது தொடர்பில் 150 விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதைவிட தேசிய தோட்டத்துறை முகாமைத்துவ நிறுவகத்தின் அனுசணையின் கீழ் பின் அறுவடை தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முல்லைத்தீவு மற்றும் புத்தளம் மாவட்டத்து விவசாயிகள் நிமித்தம் முன்னெடுக்கப்பட்டது.

## (3.3) சந்தைப்படுத்துகை மற்றும் கைத்தொழில் செயன்முறையை விருத்திசெய்தல்

### (3.3.1) பின் அறுவடை தொழில்நுட்ப விருத்தி

### (3.3.1.1) விவசாயிகளிடமிருந்து பச்சை மரமுந்திரிகையை கொள்வனவு செய்தல்

கிரயத்தை குறைத்தல் மற்றும் சந்தையில் நிலவும் போட்டிக்கு முகம் கொடுத்தல் ஆகிய குறிக்கோள்களினை கருத்தில் கொண்டு, கூட்டுத்தாபனமானது இந்த வருடம் சிறிய செயன்முறையாளர்களிடமிருந்து பச்சை மரமுந்திரிகைகளுக்குப் பதிலாக மரமுந்திரிகை பருப்புக்களை கொள்வனவு செய்ததன் விளைவு சந்தையில்

போட்டிக்குரிய விலையினை நிர்ணயிக்கக் கூடியதாக இருந்தமை ஆகும். கூட்டுத்தாபன தோட்டத்துறையிடமிருந்து கிடைக்கப்பெற்ற 109 மெட்ரிக் டொன் மரமுந்திரிகை விளைச்சலானது கூட்டுத்தாபனத்தின் ஆலைகளில் செயன்முறையாக்கம் செய்யப்பட்டது.

**(3.3.1.2) மரமுந்திரிகை செயன்முறையாக்கல் துறைக்கு வலுவளித்தல்**

உயர் தரமான மரமுந்திரிகை பருப்பு உற்பத்திகளை சந்தைக்கு முன்வைப்பதன் மூலம் உயர்ந்த விலைகளை உழைப்பதற்கு ஒரு உயர் உற்பத்தி திறமுறை மிக அவசியமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெதுப்பகம் மற்றும் மரமுந்திரிகைகளை மின்சாரத்தினால் வெட்டக்கூடிய ஒரு வெட்டும் கருவி என்பன மரமுந்திரிகை செயன்முறையாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அவர்கள் சிறந்த விவசாய செயன்முறைகள், பெறுமானம் சேர்ப்பு மற்றும் கட்டளைகள் என்பவை தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டனர். அத்தோடு நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பிலும் உதவிகளாவன செயன்முறை சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மற்றும் சிறுமட்டத்து வினைமுயலுனர்களுக்கு 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் கீழ் 100 விவசாயிகளுக்கும் அதிகமானோருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**(3.3.3) மரமுந்திரிகையை செயன்முறைபடுத்தலும் சந்தைப்படுத்தலும்**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரிகை செயன்முறை நிலையங்கள் புத்தளம் மற்றும் நெதகமுவ (கம்பஹா மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ளது. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டத்துறைகள் மற்றும் பயிர்ச்செய்கையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட பச்சை மரமுந்திரிகைகள் செயன்முறையாக்கம் செய்யப்படுவதுடன் பெறுமானம் சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை பருப்புக்கள் கொள்ளுப்பிட்டி மற்றும் இராஜகிரிய எனும் இடங்களில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களினூடாக சந்தைப்படுத்தப்படுகின்றது. இதைவிட, இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் ஒரு புதிய விற்பனை நிலையமானது, மரமுந்திரிகை விற்பனையை அதிகப்படுத்தும் நோக்குடன் 2016 ஆம் ஆண்டில் பின்னவலயிலுள்ள யானைகள் சரணாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நாடெங்கிலுமுள்ள அங்கீகரிக்கப்பட்ட

51 விற்பனை நிலையங்களில் மரமுந்திரிகை விற்பனை முன்னெடுக்கப்படுகின்றது. மிளகுதூள் சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை பழ சட்னி என்பன 2016 ஆம் ஆண்டில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய தொழில்நுட்பவியல் முறைகளை சேர்த்தனூடாகவும் மற்றும் பெறுமானம் அதிகரிக்கப்பட்டதனூடாகவும் தரம் உயர்த்தப்பட்ட மரமுந்திரிகை உற்பத்திகளை விற்பனை செய்ததனூடாகவும் கூட்டுத்தாபனம் ரூபாய். 84.59 மில்லியன் பணத்தை உழைக்கக்கூடியதாகவிருந்தது.

**(3.3.4) மரமுந்திரிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்தலும் அந்நிய செலாவணியை உழைத்தலும்**

**(3.3.4.1)** 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெறுமானம்சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை பருப்புக்கள் 57.64 மெட்ரிக் தொன் மற்றும் உயர் தரமான மரமுந்திரிகை பருப்புக்களை சர்வதேச சந்தைக்கு முன்வைத்ததனூடாக கூட்டுத்தாபனமானது ரூபாய். 99.97 மில்லியன் அந்நிய செலாவணியை உழைக்கக்கூடியதாக இருந்தது. அது போன்று 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெறுமானம் சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை பருப்புக்கள் 105.66 மெட்ரிக் டொன்களை ஏற்றுமதி செய்ததனூடாக ரூபாய். 174.06 மில்லியனை கூட்டுத்தாபனம் உழைக்கக்கூடியதாக இருந்தது. ஏற்றுமதி அளவில் வீழ்ச்சியும் அதனால் அந்திய செலாவணியில் வீழ்ச்சியும் ஏற்பட்டபோதிலும் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்ததின் காரணமாக அக நுகர்விலும் அதிகரிப்பு ஏற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**(3.3.5) மரமுந்திரிகை இறக்குமதி**

**(3.3.5.1) அகநுகர்விற்காக மரமுந்திரிகையை இறக்குமதி செய்தல்**

மரமுந்திரிகைகளின் அகநுகர்வு அதிகரிக்கப்பட்டதுடன் சீராக்கமற்ற காலநிலையின் காரணமாக மரமுந்திரிகையின் விளைச்சல் வீழ்ச்சியடைந்ததன் காரணமாகவும் சிறிய அளவிலான செயன்முறையாளர்கள் சனவரி, பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களில் பச்சை மரமுந்திரிகைகள் போதியளவு சந்தையில் இல்லாத ஒரு நிலைக்கு முகம்கொடுத்தனர். இதற்கொரு தீர்வாக சிறிய அளவிலான மரமுந்திரிகை செயன்முறையாளர்களும் பச்சை மரமுந்திரிகைகளை வரி இன்றி இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. சுங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் 1622 மெட்ரிக் டொன் பச்சை மரமுந்திரிகைகள் மற்றும் 263 மெட்ரிக் டொன் மரமுந்திரிகை பருப்புகள் என்பன சிறிய

அளவிலான உற்பத்தியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்டு அவை எண்ணிக்கையில் அதிகமான செயன்முறையாளர்களிடையில் பகிரப்பட்டது. இதனால் மரமுந்திரிகை செயன்முறை கைத்தொழில் துறையில் ஈடுபட்டு அதனையே தமது ஜீவனோபாயமாக கொண்டுள்ள குடும்பங்களின் வாழ்க்கை நிலையின் பொருளாதார தரத்தினை நிலை நிறுத்தி வைக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்டது.

(4.0) **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

செடி வளர்ப்பு, பசளைப் பாவனை, மரமுந்திரிகைகளின் பூச்சிக்கட்டுபாடு, ஒட்டு மரமுந்திரிகை தொடர்பில் வேறுபட்ட தொழில்நுட்பவியல் முறைகளை சோதித்துப் பார்த்தல், ஒட்டு மரமுந்திரிகை செடி வளர்ப்பு மற்றும் நாற்றங்கால் முறையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை ஆகிய விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியான ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன வயம பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்டத்துறை முகாமைத்துவ பீடத்துடன் கூட்டிணைந்து செயற்படுத்துகை செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் வளர்ச்சியாவன ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ செயற்குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளாவன விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஆலோசனை சேவைகளுக்கூடாகவும் விஸ்தரிப்பு சேவைகள் வலையமைப்பினூடாகவும் அதுபோன்று துண்டுப் பிரசுரங்கள், கட்புல மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாகவும் அவர்களுக்கு அறியச்செய்யப்பட்டது.

(5.0) **பாதீடு**

(5.1)

| வகுதி | முதலீடு செய்யப்பட்ட நிதியம் – 2015 (ரூபாய். மில்லியன்) | | |
|---|---|---|---|
| | அரச முதலீடு | பிறப்பிக்கப்பட்ட வருமானம் | மொத்தம் |
| மூலதன செலவினம் | 40.0 | 2.9 | 42.9 |
| நடப்பு செலவினம் | 48.0 | 80.7 | 128.7 |
| **மொத்தம்** | **88.0** | **83.6** | **171.6** |

(5.2) **வர்த்தக நடவடிக்கைகளினூடாக 2016 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்டவை தொடர்பில் விபரங்கள்**

| | **(ரூபாய். மில்லியன்)** |
|---|---|
| மரமுந்திரிகை பருப்புகளின் விற்பனை | 86.19 |
| மரமுந்திரிகை தாய் விதைகள் மற்றும் நாற்றங்கால்களின் விற்பனை | 7.33 |
| தெங்குகளின் விற்பனை | 1.43 |
| **மொத்தம்** | 94.95 |

**(6.0) நிர்வாகம்**

(6.1) சிறுமட்டத்து மரமுந்திரிகை வளர்ப்பாளர்கள், மரமுந்திரிகை செயன்முறையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன் சேவையை வழங்கும் நோக்குடன் முறை சார்ந்த முகாமைத்துவ பிரயோகங்கள் நிர்வாக செயன்முறைகளில் உள்ளடக்கப்பட்டன. கூட்டுத்தாபனமானது இலாபத்தை உழைக்கும் நோக்குடன் சேவைகளை வழங்கும் ஒரு பொது வியாபார முயற்சியாக செயற்படுவதாலும் அவ்வாறு இருப்பதாலும் கூட்டுத்தாபனத்தின் சகல பணயப் பொருளாளரினதும் உதவிகள் கூட்டுத்தாபனத்தினால் பெறப்படுகின்றது.

சபை பணிப்பாளர்கள், பொது முகாமையாளர்கள், பிரதி பொது முகாமையாளர்கள், உதவி பொது முகாமையாளர்கள் மற்றும் முழு பதவியணியினரினதும் தடையராத உதவிகள் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக, வருமானத்தை பிறப்பிப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை பூரண நிறைவுசெய்வதற்கும் அரசின் புதிய அபிவிருத்தி திறமுறைகளுடன் ஒருங்கிணைந்ததாய் கூட்டுத்தாபனத்தினால் செயற்படக்கூடியதாகவிருந்தது.

**(6.2) 2016.12.31 இல் உள்ளவாறான பதவியணி**

| **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **2016.12.31 இல் உள்ளவாறாக** | |
|---|---|---|
| உயர் முகாமைத்துவ வகுப்பு (HM) | 02 | 02 |
| இடைநிலை முகாமைத்துவ வகுப்பு (MM) | 07 | 05 |
| கனிஷ்ட முகாமைத்துவ வகுப்பு (JM) | 26 | 20 |
| முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு (MA) | 122 | 95 |
| சிறுதரத்தை சார்ந்த வகுப்பினர் (PL) | 67 | 71 |
| **மொத்தம்** | **224** | **193** |

இதைவிட கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய செயன்முறை நிலையங்கள் தோட்டத்துறைகள், செடி வளர்ப்பு நிலையங்கள் மற்றும் மத்திய செடி பண்ணைகள் என்பனவற்றில் அவ்வப்போது தேவைக்கேற்றாற் போல் செக் ரோல் தொழிலாளர்கள் 350 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

(7.0) **சாதனைகள்**

2014 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்த இலாபத்தை 2016 ஆம் ஆண்டிலும் கூட்டுத்தாபனம் உழைக்கக்கூடியதாகவுள்ளது. கூட்டுத்தாபனத்தின் வர்த்தக ரீதியிலான மற்றும் செடி உற்பத்தி நடவடிக்கைகள், சபை பணிப்பாளர்களால் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறன்மிகு வழிகாட்டல்கள் அத்துடன் பதவியணியினரின் ஈடுபாடுடன்கூடிய அர்ப்பணிப்பு என்பன இந்த இலாபத்தை கூட்டுத்தாபனம் சாதிப்பதற்கு காரணங்களாய் அமைந்தன.

2016 ஆம் ஆண்டு வருடகாலப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளினூடாக கூட்டுத்தாபனத்தினால் உழைக்கப் பெற்ற தேறிய இலாபம் ரூபாய். 31.6 மில்லியன் ஆகும்.

கீழ்வரும் குறைபாடுகளின் காரணமாக உழைக்கப் பெற்ற இலாபமானது கூட்டுத்தாபனத்தினால் பிறப்பிக்கப்பட்ட வருமானத்தை விட அதிகமாக இருக்கவில்லை.

- சீராக்கமற்ற காலநிலையின் காரணமாக மரமுந்திரிகையின் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இருக்காமை.
- அக கேள்வியினை சந்திப்பதற்கு ஏற்றவாறு போதிய அளவு பச்சை மரமுந்திரிகைகளின் விநியோகம் இல்லாத காரணத்தினால் மரமுந்திரிகை சார் உற்பத்திகளின் அதிக விலை.
- உயர் ஊழிய மற்றும் திரவிய செலவினம்.
- மட்டுப்படுத்தப்பட்ட நடப்பு மற்றும் மூலதன மானியங்கள் கிடைக்கப் பெற்றதனால் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குவதிலும் அதுபோன்று அத்தியாவசிய சேவைகளை பூரண நிறைவு செய்வதிலும் கூட்டுத்தாபனம் பிரச்சனைகளை எதிர்நோக்கியது. மேலும் கூட்டுத்தாபனத்தினால் பிறப்பிக்கப்பட்ட நிதியமானது மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாகவே பயன்படுத்த வேண்டி இருந்ததன் விளைவு கூட்டுத்தாபனத்தின் வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தளவு நிதியமே முதலீடு செய்யக்கூடியதாகவிருந்தது.

**(8.0)** **நன்றி நவிலல்**

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் சகல சேவைகளும் மற்றும் வர்த்த ரீதியான செயற்பாடுகளும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதுடன் இந்த சாதனையை பூரணப்படுத்துவதற்கு தமது முழு ஒத்துழைப்பை வழங்கிய சபை பணிப்பாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த முயற்சியில் நான் வெற்றி கொள்ளுவதற்கு அர்ப்பணிப்புடனும் அத்துடன் ஈடுபாடுடனும் கூடிய தமது தளராத உழைப்பை தந்தவர்களுக்கு குறிப்பாக, பொது முகாமையாளர், உதவி முகாமையாளர்கள் மற்றும் சகல பதவியணி அலுவலர்களுக்கும் அத்துடன் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் கூட்டுத்தாபனம் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கும் மேலும் உயர் உற்பத்தித் திறனை சாதிப்பதற்கும் ஆதாரமாக நின்றவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சிறிய மட்ட மரமுந்திரிகை செயன்முறையாளர்கள், மரமுந்திரிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்பவர்கள், சிறிய அளவில் மரமுந்திரிகையை உற்பத்தி செய்வோர், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகள் உள்ளடங்கலாக சகல பணயப்பொருளாலர்களாலும் வழங்கப்பட்ட உதவியும் மற்றும் அவர்களது ஈடுபாடுமே கூட்டுத்தாபனம் இந்தளவிற்கு தனது வெற்றியை சாதிப்பதற்கு கருவியாக அமைந்தது.

அத்துடன் கூட்டுத்தாபனம் சிறப்பாக நடத்திச் செல்லப்பட, அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் அமைச்சர் கௌரவ கபிர் ஹசிம் அவர்களினாலும் மற்றும் பிரதி அமைச்சரினாலும், அமைச்சின் செயலாளரினாலும் மற்றும் அவ்வமைச்சின் பதவியணியினராலும், எமக்கு வழங்கப்பட்ட மதிப்பிடமுடியாத வழிகாட்டல்களுக்காக எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**தம்சிறி பண்டார கருணாரட்ன**

**தலைவர்**

**இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்**

## பணிப்பாளர் சபை அறிக்கை

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை இத்துடன் நான் முன்வைக்கிறேன்.

பொது திறைசேரியின் அரச வியாபார முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டதும் 2003 ஜூன் 02 ஆம் திகதியிடப்பட்டதும் PED/12 எனும் இலக்கத்தை கொண்டதுமான சுற்றறிக்கைக்கு அமைவுற, இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுக்களாவன கணக்காய்வாளர் நாயகத்திற்கு 2016 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது.

### தாபிப்பு

இலங்கை அரசினதும் அப்போதைய தோட்டத்துறை அமைச்சரினதும் அனுமதியின் கீழ் 1973 ஆம் ஆண்டின் மே மாதம் 25 ஆம் திகதி முதல் நிலை மூலதனமாக 40 மில்லியன் பணத்துடனும், மற்றும் 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் பிரிவு 2 இன் உபபிரிவு 1 இலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற வெளியிடப்பட்ட 60/7 வர்த்தமானி அறிவித்தலின் கீழ் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது.

### விளைவளவு

நடப்பு வருடத்தின் நிதியியல் விளைவளவுகள் மற்றும் தரவுகள் ஒப்புரவு மாற்றம் பற்றிய விபரங்களாவன நிதியியல் கூற்றிலும் ஒப்புரவு மாற்றக் கூற்றிலும் காட்டப்பட்டுள்ளது.

### வியாபார மீளாய்வு

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய நிதியியல் நிலைமையானது நிதியியல் நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான மதிப்பீடு தலைவர் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள்

நடப்பு வருட காலப்பகுதியில் சொத்து, ஆதனம் மற்றும் கருவிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றில் குறிப்பு இல. 01 இல் காட்டப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள பெறுமானங்களாவன அவற்றின் நடப்பு சந்தை பெறுமானங்களுடன் அளவறிதற்குரிய மாற்றங்களுக்கு உட்படுபவன அல்ல.

**பிரதான நடவடிக்கைகள்**

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகள் வருமாறு.

- மரமுந்திரிகை பயிர்ச்செய்தல், செயன்முறையாக்கம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலுடன் மரமுந்திரிகையின் உற்பத்தி, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பில் திட்டங்களை முறைவடிவமாக்கம் செய்தலும் அவற்றின் அமுல்படுத்துகைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கலும்.
- மரமுந்திரிகை பயிர்செய்கை, சந்தைப்படுத்துகை மற்றும் அவற்றின் உற்பத்தி செயன்முறை தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகள் எடுத்தல்.
- மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பிலும் மற்றும் அவற்றின் உற்பத்தி செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பிலுமான குறிக்கோள்களை மேம்படுத்தும் வகையில் பரிசோதனைகளையும் ஆராய்ச்சிகளையும் முன்னெடுத்தல்.
- மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துகை அத்துடன் அவற்றின் உற்பத்தி, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துகை என்பவை தொடர்பில் தொழில்நுட்பவியல் சந்தைப்படுத்துகை மற்றும் ஏனைய தகவல்களை சேகரித்தல், பரிசோதித்தல் மற்றும் விநியோகித்தலுடன் இந்நடவடிக்கைகளின் அமுல்படுத்துகை தொடர்பில் ஏனையவர்களுடன் தொடர்பிணைப்பை ஏற்படுத்தல்.
- மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி செயன்முறை ஆலைகளின் இட அமைவு, அவைகளின் விஸ்தீரண மற்றும் தொழில்நுட்பவியல் கட்டளைகளை தீர்மானித்தலும் புதிய ஆலைகளை தாபித்தலும் மற்றும் தேவை ஏற்படும்போது இருக்கின்ற ஆலைகளை செயற்பட செய்தல்.
- மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை கொள்வனவு செய்தல், விநியோகித்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல்.
- மரமுந்திரிகை உற்பத்தி, செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் ஆளணிகளை பயிற்றுவித்தல்.

- மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துகை விருத்திக்கு தேவைப்படும் அடிப்படை அமைப்பாண்மைகளை தாபித்தலும் மற்றும் அத்தகைய தாபிப்பிற்கு உதவியாக இருத்தலும்.

- மரமுந்திரிகை உற்பத்தி மற்றும் அவற்றின் விற்பனையை பிரபல்யப்படுத்தக்கூடிய வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் தற்போது இந்த உற்பத்திக்கு உலக சந்தையில் தற்போது இருக்கும் கேள்வியினை மேம்படுத்தல், இத்தகைய நடவடிக்கைகளினை மேம்படுத்துவதற்கு மற்றும் துணை செய்யும் வகையிலான நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.

**ஒதுக்கீடு**

கூட்டுத்தாபனத்தின் மொத்த ஒதுக்கீட்டின் ஆக்கக்கூறுகள் ஒப்புரவு கூற்றில் தரப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்கள் சபை**

2016, டிசம்பர் 31 இல் நியமனம் பெற்ற சபைப் பணிப்பாளர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

(1) 2016.01.01 இலிருந்து 2016.02.23 வரையில் கூட்டுத்தாபனத்தின் சபைப் பணிப்பாளர் பற்றிய விபரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| (i) | திரு .டி.பி. கருணாரத்னே | தலைவர் |
| (ii) | திரு .எம்.டபிள்யு.எம். பண்டாரதிலக | பிரதி தலைவர் |
| (iii) | திரு. ஆர்.கெ. ஜயலத் | பணிப்பாளர் சபை உறுப்பினர் (பொது திறைசேரியின் பிரதிநிதி) |
| (iv) | திரு. எம்.ஆர்.எம்.ஐ. ரிசா | பணிப்பாளர் சபை, உறுப்பினர் |
| (v) | திரு. வி. மன்சநாயக | பணிப்பாளர் சபை, உறுப்பினர் |

(2) 2016.02.24 இலிருந்துகூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமனம் பெற்ற உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| (i) | திரு .டி.பி. கருணாரத்னே | தலைவர் |
| (ii) | திரு .எம்.டபிள்யு.எம். பண்டாரதிலக | பிரதி தலைவர் |
| (iii) | திரு. ஆர்.கெ. ஜயலத் | பணிப்பாளர் சபை உறுப்பினர் பொது திறைசேரியின் பிரதிநிதி (2016.04.27 வரையில்) |
| (iv) | திருமதி. எ.எ.டி.எஸ். அதபது | பணிப்பாளர் சபை உறுப்பினர் (பொது திறைசேரியின் பிரதிநிதி) (2016.05.26 இலிருந்து) |

| | | |
|---|---|---|
| (v) | திரு. எம்.ஆர்.எம்.ஐ. ரிசா | பணிப்பாளர் சபை, உறுப்பினர் |
| (vi) | திரு. வி. மன்சநாயக | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| (vii) | திரு. கெ. லிங்கராஜா | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| (viii) | திரு. எ.எஸ்.எம். பஸ்மி | பணிப்பாளர் சபை உறுப்பினர் |

2016 ஆம் ஆண்டிற்கு பணிப்பாளர் சபை செயலாளர் – திரு. லியனகே யூ.வீ. ( 2016.03.30வரையில்)
திரு. கீர்த்தி ஜயகொடி ஆராய்ச்சி (பொது முகாமையாளர்) (2016.04.27 இலிருந்து)

**கணக்காய்வு செயற்குழு**

அரச வியாபார முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு அமைவுற கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு குழு தாபிக்கப்பட்டது.

**நியதிச் சட்ட கொடுப்பனவுகள்**

அரசிற்கும் ஊழியர்களுக்கும் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய நியதிச் சட்ட கொடுப்பனவுகள் முறையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**சூழல் பாதுகாப்பு**

சூழலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய எதுவித செயற்பாடுகளிலும் கூட்டுத்தாபனம் ஈடுபடுவதில்லை.

**நிதிநிலைமைக் கூற்றின் திகதிக்குப் பின் நடந்த நிகழ்வுகள்**

ஐந்தொகை திகதிக்குப் பின் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்தல் செய்வதற்கு எதுவித நிகழ்வுகளும் அறிக்கை செய்யப்படவில்லை.

**கணக்காய்வாளர்கள்**

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய நிதியியல் கூற்றுக்கள் அரச கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

சபை பணிப்பாளர்களுக்காக

**கீர்த்தி ஜயகொடி ஆராய்ச்சி**
**பணிப்பாளர் சபை செயலாளர்.**

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு அறிக்கை

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவானது பொது வியாபார முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம்: 51,53மற்றும் 55 (PED 51,PED 53, PED 55) இனால் திருத்தியமைக்கப்பட்ட 2005.07.01 இன் 31 ஆம் இலக்க பொது வியாபார முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை (PED 31) மூலம் தாபிக்கப்பட்டதுடன் ஏழு உறுப்பினர்கள் மற்றும் ஒரு அவதானிப்பாளர் என 08 பேர்களை கொண்டதாக அமைந்துள்ளது.

நிதி விவகாரங்கள் தொடர்பில் விசால அனுபவத்தையுடைய ஒரு நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் செயற்குழுவின் தலைவராகவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் / சபைப் பணிப்பாளர்களின் செயலாளர் செயற்குழுவின் செயலாளராக கடமையாற்றுவர்.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவானது 04 தடவைகள் கூட்டப்பட்டதுடன் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அவதானிப்பாளர் கீழ்வரும் முறையில் செயற்குழுவில் பங்குபற்றினர்.

01. திரு. ஆர்.கெ. ஜயலத் : செயற்குழு தலைவர் 1/1
சபை பணிப்பாளர்களின் நிறைவேற்று அல்லாத உறுப்பினர்கள் –2016.04.28 வரையில் (திறைசேரி பிரதிநிதி)

02. திருமதி. எ.எ.டி.எஸ். அதபது : செயற்குழு தலைவர் 3/3
சபை பணிப்பாளர்களின் நிறைவேற்று அல்லாத உறுப்பினர் – 2016.06.23 இலிருந்து (பொது திறைசேரி பிரதிநிதி)

03. திரு. வி.எம். மன்சநாயக : செயற்குழு உறுப்பினர் 4/4
சபை பணிப்பாளர்களின் நிறைவேற்று அல்லாத உறுப்பினர்

04. திரு. எம்.ஆர்.எம்.ஐ. ரிசா : செயற்குழு உறுப்பினர் 3/4
சபை பணிப்பாளர்களின் நிறைவேற்று அல்லாத உறுப்பினர்

05. திரு. டி. கே. ஜயகொடிஆராச்சி : செயற்குழு செயலாளர் 4/4
பணிப்பாளர் சபையின் பொது முகாமையாளர்/செயலாளர் – 2016.04.27 இலிருந்து

06. திரு. பி.பி. கொடிகார : செயற்குழு உறுப்பினர் 3/3
பிரதி பொது முகாமையாளர்– 2016.09.21 இலிருந்து

07. திரு. எம்.டி.எஸ்.கெ. பீரிஸ் : செயற்குழு உறுப்பினர் 3/3
உதவி பொது முகாமையாளர் – நிதி – 2016.09.21 வரையில்

08. திரு. யு.வி. லியனகே : செயற்குழு செயலாளர் 4/4

உதவி பொது முகாமையாளர் –உள்ளக கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் சபையின் செயலாளர் – (2016.03.30வரையில் பணிப்பாளர் சபையின் செயலாளராகவும் கடமையாற்றியதுடன் 2016.04.27 வரையில் செயற்குழு உறுப்பினராகவும் கடமையாற்றினார்.)

09. திருமதி. ஆர்.பி.எஸ். பத்மினி : செயற்குழு அவதானிப்பாளர் 3/3

கணக்காய்வு மேற்பார்வையாளர் (கணக்காய்வாளர் நாயக திணைக்களம்)

10. திருமதி. எச்.பி.கெ. சுபத்ரா : செயற்குழு அவதானிப்பாளர் 1/1

கணக்காய்வு பரிசோதகர்– 2016.06.23 மாத்திரம்

2016 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு பகுதிக்காக இடம்பெற்ற முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின்போது, இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தினால் அதனது சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கிய வகையில் 2016 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் எய்தப்பெற்ற முன்னேற்றங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கை 2016 ஆம் ஆண்டு முதலாவது காலாண்டு பகுதியில் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் அவதானிக்கப்பட்டு முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டதுடன் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப் பட்டதுமான விடயங்கள் மற்றும் அவதானிக்கப்பட்ட இந்த விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகளை உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஆகியவை தொடர்பில் விரிவாக மீள்நோக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு தொடர்பில் இடம்பெற்ற 2வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு கூட்டத்தில், 2015 ஆம் ஆண்டில் நிதிச்சட்டம் 13(7) பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற கணக்காளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தினால் சேர்த்துக்கொள்வதற்கு பிரேரிக்கப்பட்டிருக்கும் செயற்பாடுகள் மற்றும் அவை தொடர்பில் உள்ள கருத்துரைகள் என்பனவற்றை உள்ளடக்கிய அறிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இதற்கமைவுற செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணகாய்வு அவதானிப்பும் தனித்தனியாக கவனத்திற் கொள்ளப்பட்டதுடன் அதற்காக முன்மொழியப்பட்ட கருத்துரைகளும் அத்துடன் செயற்பாடுகளும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவானது, இலங்கை கணக்கியற் கொள்கை 19 இற்கு அமைவுற, ஊழியர்களை வெளிப்படுத்துதல் மற்றும் 41/90 நிபந்தனைகளுக்கு அமைவுற எரிபொருள் நுகர்வு சோதனை என்பவை தொடர்பில் முன்மொழியப்பட்டிருந்த நடவடிக்கைகள் பற்றி வரைவு அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருந்த விளக்கங்களுக்கு சீர்திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் அந்த வரைவு அறிக்கையினை சபை பணிப்பாளர்களுக்கு அனுமதிக்காக சமர்ப்பிப்பது என்ற தீர்மானத்திற்கு வந்தனர்.

2016 ஆம் ஆண்டில் இடம்பெற்றமூன்றாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவின் போது, 1வது காலாண்டுப் பகுதிகளின்போது கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டு கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த அவதானிப்புரைகள் மற்றும் இந்த அவதானிப்புரை தொடர்பில் முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைப்புகள் தொடர்பில் செயற்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட அறிக்கைகள் என்பன கூட்டுத்தாபனத்தின் சபைப் பணிப்பாளர்களுக்கு முன்வைக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நான்காவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவின்போது செயற்குழுவின் பரிந்துரைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு 2017 ஆம் ஆண்டிற்குரிய கூட்டுத்தாபனத்தின் செயல்திட்டம் தொடர்பிலான அறிக்கை, 2017 ஆம் ஆண்டிற்குரிய கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு திட்டமும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தேடி வழங்குதல் திட்டமும் முன்வைக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பில் செயற்குழு கூட்டத்தின்போது விரிவாக கலந்துரையாடப்பட்டு இவை தொடர்பிலான பரிந்துரைப்புகளாவன கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டது.

அத்துடன் செயற்குழுவானது, 2016.07.01 இலிருந்து 2016.11.30 வரையுள்ள 05 மாத காலப்பகுதிக்குரியதாய் கூட்டுத்தாபனத்தின் அக கணக்காய்வு பிரிவினால் முகாமைத்துவத்திற்கு முன்வைக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் அந்த அவதானிப்புக்களுக்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகள் என்பவை தொடர்பில் விரிவாக கலந்துரையாடியது. இந்தக் கூட்டத்தின்போது, கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களினால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு அறவிடப்படாது. தாமதமாகியுள்ள நிலுவைகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. இதற்கமைவுற சம்பந்தப்பட்ட பரிந்துரைப்புகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**எ.எ.டி.எஸ். அதபது**
**தலைவர்**
**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு.**

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**1. 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை**

**01 மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மானிய திட்டம்**

**1.1 மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்கான மானிய திட்டம்**

மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்கான மானிய திட்டத்தின் கீழ், ஒட்டு மரமுந்திரிகை அடிப்படையில் செய்யப்பட்ட 2500 ஏக்கர்கள் மற்றும் நாற்றங்கால் மரமுந்திரிகை என்ற அடிப்படையில் செய்யப்பட்ட 2000 ஏக்கர்கள் என மொத்தமாக 4500 ஏக்கர்கள் பயிர்ச்செய்கைகள் செய்யப்பட்டது. இந்த பரப்பளவு 18 மாவட்டங்களில் உள்ளடக்கியதாகும். இதன் மூலம் 3298 விவசாய குடும்பங்கள் நன்மை அடைந்தன. செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபாய் 13.95 மில்லியன் ஆகும்.

**02. பயிர்ச்செய்கையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்**

**2.1 நடுகை திரவியங்களின் உற்பத்தி**

வேறுபட்ட பரப்பெல்லைகளுக்கு ஏற்ற வகையில் புதிய வகை மரமுந்திரிகைகளை வளர்க்கும் நோக்குடனும் அவற்றை மரமுந்திரிகையை சிறிய அளவில் வளர்ப்போருக்கு வழங்கும் நோக்குடனும் மாத்தளை மாவட்டத்தில் உள்ள நளான்டெயின், அனுராதபுர மாவட்டத்திலுள்ள விலாச்சியா, அம்பாறை மாவட்டத்தில் உள்ள மஹாஓயா மற்றும் மொனறாகலை மாவட்டத்தில் உள்ள சுதுவதுர ஆகிய செடி வளர்ப்பு நிலையங்கள் பேணப்பட்டன. விஸ்தரிப்பு சேவைகள் மற்றும் வர்த்தக ரீதியான செயற்பாடுகளுக்கு அத்தியவசியமான ஒட்டு மரமுந்திரிகை சேவைகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான உயர் தரமான தாய் விதைகள் 13.91 மெட்ரிக் தொன் மற்றும் 264000 தளிர்களும் இந்த நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் செலவழிக்கப்பட்ட ரூபாய் 13.98 மில்லியனாகும்.

## 2.2 உற்பத்தியை மேம்படுத்தல்

மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை தாக்கக்கூடிய பூச்சிகளினை நாசம் பண்ணவும் அதற்கேற்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாக்கவும் அத்துடன் சிறந்த விவசாய செயன்முறைகளினை சேர்ப்பதன் மூலம் (GAP) உற்பத்தி திறனை மேம்படுத்தவும் ஒரு புதிய இரசாயனக் கலவை அறிமுகப்படுத்தப்பட்டு பரிசோதித்து பார்க்கப்பட்டதுடன் அதற்கான பெறுபேறும் வெற்றிகரமாக அமைந்தது மேலும் பிரதானமான 4 தோட்டத்துறைகளிலிருக்கும் மரமுந்திரிகை மரங்களின் தண்டு மற்றும் வேர் துளைகளை அழிக்கும் கருநிற வண்டுகளை அழிப்பதற்கும் பூச்சி நாசினிகள் பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பில் ஏற்பட்ட செலவினம் ரூபாய்1.18 மில்லியனாகும்.

## 2.3 செடி பண்ணை முகாமைத்துவம்

கூட்டுத்தாபனத்தின் 07 மத்திய செடிப் பண்ணைகள் கமன்டலுவ தோட்டத்துறை, அளுத்தராம, ஹார்டி, மிஹிந்தலை, சந்திரிக்கா வெவ, தம்புள்ள மற்றும் கும்புக்கண ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி ஒட்டு மரமுந்திரிகை செடிகளை உற்பத்தி செய்யும் பொருட்டு, கமன்டலுவ, மிஹின்தலை, மட்டக்களப்பு மற்றும் அளுத்தராம செடிப்பண்ணைகளில் 06 பொலிநெட் வீடுகள் அமைக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் பெரும்போகத்தின் உயர் தரமான ஒட்டு மரமுந்திரிகை செடிகள் 209125 இந்தப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டதுடன் அவை விவசாயிகளிடையே பகிரப்பட்டன.

## 03. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

விவசாய பீடம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் தோட்டத்துறை முகாமைத்துவம் ஆகியவற்றுடன் கூட்டிணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. செடி வளர்ப்பு, பசளைப் பாவனை, செடிகளின் அடர்த்தி, மரமுந்திரிகை பயிர்ச்செய்கையில் நோய்களும் பூச்சிக்கட்டுபாடு, ஒட்டு மரமுந்திரிகை செடி வளர்ப்பு மற்றும் நாற்றங்கால் முறையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, ஒட்டு மரமுந்திரிகை தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண்மை தொடர்பிலான ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் விஸ்தரிப்பு சேவைளினூடாக விவசாயிகளுக்கு அறியச்செய்யப்பட்டதுடன் இவ்விடயம் தொடர்பில் செலவிடப்பட்ட பணம் ரூபாய் 3.14 மில்லியன் ஆகும்.

## 04. கூட்டுத்தாபனத்தின் தோட்டத்துறைகளைப் பேணலும் பயிர்களின் மறுசீரமைப்பும்

கொண்டாச்சி தோட்டத்துறையில் 150 ஏக்கர்களில் காடழிப்பு பணி தொடங்கப்பட்டு கிட்டத்தட்ட 100 ஏக்கர்களில் பயிர் நடுகையும் முன்னெடுக்கப்பட்டது. புதிய பயிர்ச்செய்கை என்ற அடிப்படையில் மஹாஓயாவில், 800 இளம் நாற்றுக்கள் நடப்பட்டதுடன், சுதுவதுர விதை பூமியில் 500 இளம் நாற்றுக்களை நடும் பொருட்டு களைகள் அகற்றப்பட்டன.

தோட்டத்துறைகளில் முன்னெடுக்கப்பட்ட வேளாண்மையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பச்சை மரமுந்திரிகைகளின் அளவு 109 மெட்ரிக் டொன்கள் ஆகும். மேலும் இதிலிருந்து பெறக்கூடிய உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் இரசாயண பசளை பாவிப்பு, களை ஒழிப்பு, பூச்சிக்கொல்லிகளும் நோய்களும் இல்லாதொழிக்கப்பட்டல் மற்றும் அநாவசிய கிளைகளை நறுக்குவதனூடாக செடிகளினை தேவைக்குத் தகுந்தாற்போல் வளர்த்தல் போன்ற விவசாய ரீதியிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் பொருட்டு செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 14.64 மில்லியன் ஆகும்.

## 05. பின் அறுவடை தொழில்நுட்பம்

### 5.1 செயன்முறை கைத்தொழில் துறையின் சந்தைப்படுத்துகையும் மேம்படுத்துகையும்

கூட்டுத்தாபனங்களின் தோட்டத்துறையிடமிருந்து பெற்றுக்கொண்ட விளைச்சலும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்த பச்சை மரமுந்திரிகைகளும் புத்தளம் மற்றும் நெதன்கமுவையில் இருக்கின்ற செயன்முறை நிலையங்களில் செயன்முறையாக்கம் செய்யப்பட்டது. அவை பெறுமானம் சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக மாற்றப்பட்டு பின் கூட்டுத்தாபனத்தின் பிரதான விற்பனை நிலையங்களில் விற்கப்பட்டன. இந்நோக்கத்தின் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில் 39 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் பயன்படுத்தப்பட்டன. பெறுமானம் சேர்க்கப்பட்ட உற்பத்திகள் என்ற வகையில் மிளகுதூள் தூவிய மரமுந்திரிகைகள் மற்றும் மரமுந்திரிகை பழத்தால் செய்த சட்னி எனும் பெயரில் இரு புதிய வகை உற்பத்திகளாவன நுகர்வோருக்கு அறிமுகப் படுத்தப்பட்டதுடன் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தை சார்ந்த சிறிய அளவிலான செயன்முறையாளர்களுக்கும் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கும் சிறந்த உற்பத்தி செயன்முறைகள் பற்றிய அறிவானது 03 பயிற்சி நிதழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு அதன் மூலம் புகட்டப்பட்டதுடன் அவர்கள் பயிற்றுவிக்கவும்பட்டார்கள். இந்த

நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 100 விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. சந்தைப்படுத்தல் செயன்முறைகள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபாய். 84.59 மில்லியன் ஆகும்.

## 06. மனித வள அபிவிருத்தி

பதவியணியினரின் ஒவ்வொரு தரத்தினைச் சார்ந்தவர்களையும் விருத்தி செய்யும் நோக்குடன் பதவியிலுள்ள போதே பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் அவர்களுக்கு அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், அவரவர்களது விடயத்துறையில் அவர்களது அறிவினை இற்றைபடுத்தவும் புதிய அறிவினை பெற்றுக்கொண்டு வினைத்திறனை கூட்டவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. "பழக்க நடத்தைகளும் ஆளணி விருத்தியும்" என்ற தலைப்பில் ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தனியார் துறையினைச் சார்ந்த பயிற்சி நிறுவகம் ஒன்றினால் பதவியணி உறுப்பினர்கள் 60 பேருக்கு நடாத்தப்பட்டது. இது தொடர்பில் ஏற்பட்ட செலவினம் 0.13 மில்லியனாகும்.

**இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை முன்னேற்றுவதற்காக சேர்க்கப்பட்ட இடைத் தவணை தீர்வுகள்.**

கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை முன்னேற்றும் நோக்குடன் கூட்டுத்தாபனத்தினால் பல இடைத் தவணை தீர்வு நடவடிக்கைகள் தொடங்கப்பட எதிர்ப்பார்க்கப்பட்டது.

01. இலங்கையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை நிலங்களின் விஸ்தீர்ணத்தை அதிகரித்தல்
02. மரமுந்திரிகை வளர்ப்பு நிலங்களின் உற்பத்தி திறனை அதிகரித்தல்.
03. மரமுந்திரிகை பயிர்ச்செய்கையுடன் தொடர்புற்ற வகையில் பின் அறுவடை தொழில்நுட்பங்களை மேம்படுத்தல்.
04. மனித வள விருத்தியும் உற்பத்தித் திறன் அதிகரிப்பும்.

**01. இலங்கையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை நிலங்களின் விஸ்தீர்ணத்தை அதிகரித்தல்**

**1.1 விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை**

ஆரம்பத்தில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையானது வரள் வலயத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற போரின் காரணமாக கிட்டத்தட்ட 30,000 ஏக்கர் மரமுந்திரிகை நிலங்கள் அழிக்கப்பட்டன. எவ்வாறாயினும் 2010 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்துகை செய்யப்பட்டு வரும் விஸ்தரிப்பு நிதித்திட்டத்தின் கீழ் ஒருவருடத்திற்கு கிட்டத்தட்ட 7,000 ஏக்கர் நிலப்பரப்பு மறுசீரமைக்கப்பட்டது.

திறைசேரியினால் நிதியீடு செய்யப்படும் விஸ்தரிப்பு மானிய நிதி திட்டத்தின் கீழ் அடுத்து வரும் மூன்று வருடங்களில் ஒட்டு மரமுந்திரிகை மற்றும் நாற்றங்கால் மரமுந்திரிகை வேளாண்மை பயிர்ச்செய்கை ஒரு வருடத்திற்கு 4500.00 ஏக்கர் என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்படவுள்ளது. மேலும் இராணுவ முகாம்கள், பொலிசு, சிறைச்சாலை மற்றும் புனித ஸ்தலங்கள் உள்ள இடங்களில் உள்ள நிலங்களை பயன்படுத்தி இந்த 4500 ஏக்கர்களில், 750 ஏக்கர்கள் நிலத்தினை மானியத்திட்டத்தின் கீழ் வேளாண்மை செய்வதற்கும் இதன் பொருட்டு இத்தகைய பிரதேசங்களில் அதிகமாக கிடைக்கக்கூடிய ஊழியத்தை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதுபோன்று வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை என்ற ரீதியில் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு 1500 ஏக்கர்களில் பயிர்ச்செய்கை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 1.2 தோட்டத்துறையின் மறுசீரமைப்பு

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டத்துறையில் முன்னைய தோட்டத்துறைகள மறுசீரமைப்பதுடன் புதிய பயிர்ச்செய்கையை ஆரம்பித்தலானது 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் கீழ் வட மாகாணத்தின் கொண்டாச்சி தோட்டத்துறை மற்றும் கிழக்கு மாகாணத்தின் மாங்கேணி தோட்டத்துறை என்பன சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து அதன் துணையுடன் மறுசீரமைக்கப்பட்டது. இதன்படி கொண்டாச்சி தோட்டத்துறைகளில் 2000 ஏக்கர் நிலப்பரப்பிலும் திரியாய தோட்டத்துறையில் 500 ஏக்கர் நிலப்பரப்பிலும் மதுவில் 500 ஏக்கர் நிலப்பரப்பிலும் அரச - தனியார் இணை கருத்திட்டம் என்ற அடிப்படையில் பயிர்ச்செய்கை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.3 புதிய பயிர்ச்செய்கை

சிறிய அளவில் மரமுந்திரிகை வளர்ப்போரின் மரமுந்திரிகை வளர்ப்பு நிலங்களில் ஒரு வருடத்திற்கு ஐந்நூறு ஏக்கர் என்ற அடிப்படையில் புதிய பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. மேற்கூறப்பட்ட சகல பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகை செய்வதனூடாக ஒரு வருடத்தில் ஆகக்குறைந்தளவில் நோக்கின் மரமுந்திரிகை வளர்ப்பு நிலங்களின் விஸ்தீரனம் 7,000 ஏக்கரினால் அதிகரிக்கப்பட இடமுண்டு.

இந்நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமுல்படுத்துகை செய்யப்படுவதற்கும் மரமுந்திரிகை பயிர்ச்செய்கைகளின் விருத்தி பணி தொடர்பிலும் கருத்திற்கொள்ளப்பட்டு 10 பிராந்திய அலுவலகங்களை உள்ளடக்கிய வகையில் ஒரு விஸ்தரிப்பு சேவை வலையமைப்பானது அமுல்படுத்துகை செய்யப்பட்டுள்ளதுடன் இந்த வலையமைபில் மரமுந்திரிகை அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் 18 மாவட்டங்களும் உள்ளடங்கும்.

## 02. மரமுந்திரிகை வளர்ப்பு நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

இலங்கையில் மரமுந்திரிகை வளர்க்கப்படும் நிலங்களின் விஸ்தீரணம் 136608 ஏக்கர் நிலப்பரப்பாகும். இவற்றுள் 88 வீதம் சிறிய அளவில் மரமுந்திரிகை வளர்ப்போர் ஆகும். இந்நிலங்களில் நாற்றங்கால் மரமுந்திரிகை மரங்கள் அதிகளவில் பயிர்ச்செய்கை செய்யப்படும் என்பதுடன் இந்த நிலங்களில் இருக்கும் மரமுந்திரிகைகள் 20–35 வருடகால வயதினை கொண்டதாக இருப்பதுடன் இவை 3–5 கிலோகிராம் பச்சை மரமுந்திரிகைகளை தரக்கூடிய தன்மை வாய்ந்தது. வியட்நாம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உயர்தரத்திலான புதிய வகையினைச் சார்ந்த மரமுந்திரிகைகள் பயிர்ச்செய்கை செய்யப்படுகிறது. ஒரு மரமானது 10–15

கிலோகிராம் மரமுந்திரிகைகளை தருகின்றது. இதற்கமைவுற தோட்டத்துறையின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு கூட்டுத்தாபனமானது கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துகை செய்கின்றது.

## 2.1 புதிய வகைகளை அறிமுகப்படுத்துதல்

உயர்விளைச்சலைத் தரக்கூடிய 08 புதிய வகையான மரமுந்திரிகை வகைகளை மரமுந்திரிகை வளர்ப்பாளர்களுக்கு கூட்டுத்தாபனமானது அறிமுகப்படுத்தியுள்ளது. வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்டத்துறை முகாமைத்துவத்துடன் கூட்டிணைந்து ஆராய்ச்சி பணிகள் தொடங்கப்பட்டதுடன், அதிக விளைச்சலை தரக்கூடிய 08 புதிய உயர்தரமான மரமுந்திரிகை வகைகளான WUCC 1, WUCC 5, WUCC 8, WUCC 9, WUCC 13, WUCC 19, WUCC 21, WUCC 23 என்பன எளுவாங்குளம், விலாச்சியா, நாளந்த, மஹாஓயா, சுதுவதுர மற்றும் ஒயம்மதுவ ஆகிய தோட்டத்துறைகளிலும் மற்றும் செடி வளர்ப்பு நிலையங்களிலும் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது. இந்த தாய் மரங்களிலிருந்து அரும்புகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் அவற்றினை மரமுந்திரிகை வளர்ப்பாளர்களுக்கு வழங்கவும் அத்தோடு நாட்டின் வேறுபட்ட காலநிலைக்கு பொருந்தும் வகையில் புதிய வகைகளை வளர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒரு ஹெக்டெயருக்கு 1000 கிலோகிராம் என்ற அடிப்படையில் மரமுந்திரிகை விளைச்சலை அதிகப்படுத்தும் நோக்குடன் இரு புதிய வகை மரமுந்திரிகைகள் அறிமுகப்படுத்தப்படும்.

## 2.2 சிறந்த விவசாய செயன்முறைகளின் பிரயோகம்

குறைந்த விளைச்சலைத் தரும் நாற்றங்கால்களை அகற்றிவிட்டு மீண்டும் புதிதாக மீள்நடுகை செய்யப்படுவதற்கு ஒவ்வொரு வருடமும் சிறிய அடிப்படையில் மரமுந்திரிகை வளர்ப்பாளர்கள் நெறிப்படுத்தப்படுகின்றனர். சிறந்த விவசாய செயன்முறைகளை பிரயோகிப்பதனூடாக மரமுந்திரிகை விளைச்சலை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய தோட்டத்துறை முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்து மரமுந்திரிகை வளர்ப்பாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டன. அடுத்து வரும் மூன்று வருட காலங்களிலும் இதனை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக கட்புல ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பூக்கும் காலத்தில் அதிக மழையின் காரணமாக தோட்டத்துறைகளில், தளிர்கள் அழுகும் நோய் ஏற்பட சாத்தியக்கூறுகள் உள்ளன.

இதன் பெறுபேறு மரமுந்திரிகை விளைச்சலானது 30%- 40% வரை குறையலாம். இதைவிட சிறிய அளவில் மரமுந்திரிகை வளர்ப்பாளர்களை மரமுந்திரிகை வளர்ப்பு தொடர்பில்

அறிவுப்பூர்வமாக்குதல் மிக முக்கியமான ஒரு காரணியாக இருக்கின்றது. முதிர்ச்சியுற்ற மரமுந்திரிகைகளுக்கு கம்பளிப்பூச்சினால் ஏற்படக்கூடிய சேதத்தின் அளவை குறைக்கும் நோக்குடன் ஒரு பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டமானது ஆராய்ச்சி அலகுடன் கூட்டிணைந்து செயற்படுத்துகை செய்யப்படுவதுடன் அது அடுத்துவரும் மூன்று வருடங்களில் செயற்படுத்துகை செய்யப்படுதவற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3 மத்திய செடிப் பண்ணைகள்

கூட்டுத்தாபனத்தில் மத்திய செடிப் பண்ணைகளாவன மிஹிந்தலை, தம்புள்ள, கமண்டலுவ தோட்டத்துறை, அளுத்தாராமை, கும்புக்கண, ஹார்டி தோட்டத்துறை மற்றும் சந்திரிக்கா வெவ ஆகிய இடங்களில் உள்ளது. இந்தப் பண்ணைகளில் உயர் வகை மரமுந்திரிகை தாவரங்களின் ஒட்டு செடிகள் கூட்டுத்தாபனர்களின் அலுவலர்களின் கண்காணிப்பாளர்களின் கீழ் வளர்ப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த செடிப் பண்ணைகளில் 300000 ஒட்டு மரமுந்திரிகை செடிகள் வருடாந்தம் தயாரிக்கப்படுவதுடன் எதிர்வரும் 3 வருடங்களில் ஒரு வருடத்திற்கு 350000 செடிகள் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செடி உற்பத்திகள் தொடர்பில் புதிய தொழில்நுட்பங்களின் பாவனை ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

## 03. மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பின் அறுவடை தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்

இலங்கை மரமுந்திரிகைகளுக்கு இருக்கும் சுவை, பருமன் மற்றும் அதன் நிறம் காரணமாக உலக சந்தையில் இவற்றிற்கு உயர்ந்த கேள்வி உண்டு. எவ்வாறாயினும் வருடாந்த பச்சை முந்திரிகைகளின் விளைச்சலானது 10,000–12,000 வரை இருப்பதினால் உடனடியாக ஏற்றுமதியின் செயற்றிறனை அதிகரிப்பது சாத்தியப்படக்கூடியதொன்றல்ல. இத்தோடு மரமுந்திரிகை பருப்புக்களின் அகநுகர்வும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதைவிட ஒருகிலோ மரமுந்திரிகை பருப்புக்களின் உற்பத்தி செலவினமானது அதிகரித்துள்ளமையால் இதன் விலையானது ரூபாய். 2500 – ரூபாய். 3500 வரை அதிகரித்துள்ளது. இந்த விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு மரமுந்திரிகையின் மூலம் கிடைக்கக்கூடிய இலாபத்தை அதிகரிக்கவும் மற்றும் அதன் தரத்தைக் கூட்டவும் மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் நடிவடிக்கை எடுத்துள்ளது.

### 3.1 சிறந்த உற்பத்தி செயன்முறைகள்

கூட்டுத்தாபனமானது, கட்டளைகளை பயன்படுத்துதல், பெறுமானம் சேர்ப்பு, சிறந்த உற்பத்தி செயன்முறைகளை பயன்படுத்தி உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல், சுகாதாரமான

உற்பத்தி செயன்முறைகளை பயன்படுத்துதல், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துதலினூடாக மரமுந்திரிகை செயன்முறைகளை நவீனமயப்படுத்துதல், புதிய முறையில் பொதியிடல் முறைகள் மற்றும் சிறிய மட்டத்திலான வினைமுயற்சியாளர்களுக்கிடையே புதிய வகை உற்பத்தி பொருட்களின் முறைகளை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றினை ஊக்குவிக்கின்றது. இந்நோக்கத்திற்காக நெதகமுவ எனும் இடத்தில் உள்ள பயிற்சி நிலையம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**3.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

சிறிய அளவிலான மரமுந்திரிகை உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் சர்வதேச சந்தையிலுள்ள மரமுந்திரிகையின் தரத்தை அடைவதற்கு அந்த உற்பத்தியாளர்களின் உற்பத்திக்களை உயர்த்தும் நோக்குடன் கூட்டுத்தாபனமானது, இத்தகைய ரீதியிலான மரமுந்திரிகை செயன்முறையில் ஈடுபட்டுள்ளோரின் 50 பேருக்கு ஆண்டுதோறும் இவ்விடயம் தொடர்பில் பயிற்சியினை வழங்குகின்றது. இச்செயன்முறையானது அடுத்துவரும் 3 வருடங்களிலும் தொடரப்படும்.

அத்துடன் தற்போது மரமுந்திரிகை செயன்முறை கைத்தொழிற்துறையினை செய்யத் தொடங்கியுள்ளோருக்கு மின்சாரத்தின் உதவியுடன் செயற்படும் மரமுந்திரிகையின் தோலை துப்பரவாக்கித்தரும் இயந்திரமும் மற்றும் வெதுப்பகத்தையும் ஓர் நியாயமான விலையில் வழங்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டமானது கூட்டுத்தாபனத்தினால் முன்னெடுக்கப்பட்டு அது தொடர்ந்தும் செய்துகொண்டு வரப்படுகின்றது.

**3.3 மரமுந்திரிகை வளர்ப்பாளர்களிடமிருந்து பச்சை மரமுந்திரிகையை கொள்வனவு செய்தல்**

மரமுந்திரிகை செயன்முறை ஆலைகளினால் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் மரமுந்திரிகைகளின் அளவின் மட்டத்தை தொடர்ந்தும் பேணும் பொருட்டு கூட்டுத்தாபனமானது அதனது தோட்டத்துறைகளிலிருந்து சேகரிக்கும் விளைச்சலைவிட மேலதிகமாக மரமுந்திரிகை வளர்ப்பாளர்களிடமிருந்தும் கடந்த வருடம் கொள்வனவு செய்தது. சந்தையில் நிலவும் போட்டிக்கு முகம் கொடுக்கவும் மற்றும் கிரயத்தை குறைக்கும் நோக்குடனும் பச்சை மரமுந்திரிகைகளாவன மரமுந்திரிகை வளர்ப்பு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதற்குப் பதிலாக மரமுந்திரிகை பருப்புகளாவன, சிறிய மட்டத்து

செயன்முறையாளர் களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. அடுத்துவரும் மூன்றுவருட காலங்களில் விவசாயிகளிடமிருந்து பச்சை மரமுந்திரிகைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**3.4 மரமுந்திரிகை உப உற்பத்திகளை மேம்படுத்தல்**

மரமுந்திரிகை விளைச்சலிலிருந்து பச்சை மரமுந்திரிகைகள் வேறதாக்கப்படுவதுடன் முந்திரிப்பழங்கும் அவற்றிலிருந்து எதுவித பயனையும் பெற்றுக் கொள்ளாது விரயமாகின்றது. இதற்கமைவுற ஒவ்வொரு வருடமும் 10,000 முந்திரிப்பழங்கள் எதுவித பயனும் பெறப்படாது அவை விரயமாகின்றன. இதைவிட இந்த முந்திரிப்பழங்களிலிருந்து மதுசாரம் அற்ற பானங்கள், பழச்சாறு, பழப்பாகு மற்றும் முந்திரிப்பழங்களிலிருந்து உப உற்பத்திகளை உற்பத்தி செய்தல் தொடர்பில் ஆராய்ச்சியை முன்னெடுப்பதற்கும் அதுபோன்று இவ்விடயம் தொடர்பில் பயிற்சியை வழங்கவும் உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் இவ்விடயம் தொடர்பிலான ஒரு இணை நிகழ்ச்சித்திட்டமானது தனியார் துறையினருடன் இணைந்து செயற்படுத்துகை செய்யப்படுகின்றது.

**04. மனிதவள அபிவிருத்தியும் உற்பத்தித் திறன் அதிகரிப்பும்**

**4.1 மனிதவள பயிற்சியும் அபிவிருத்தியும்**

பதவியணியினரில் சகல மட்டத்தையும் சார்ந்த அலுவலர்களின் பயிற்சியினையும் அபிவிருத்தியினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான பயிற்சியினை சேவையில் உள்ளபோதே வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டமானது, பதவியணியினருக்கு அவரவர்களின் பணி தொடர்பிலான உற்பத்தி திறனின் உயர் மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கும் அதுபோன்று அவர்களுடைய விடயத்துறையில் இற்றைப்படுத்தப்பட்ட அறிவினை பெற்றுக்கொள்வதற்கும், அண்மித்த தகவல்கள் தொடர்பில் அறிவினை பெற்றுக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பினையும் அத்துடன் சுய ஊக்குவிப்பினூடாக உயர் மட்டத்திலான வினைத்திறனையும் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கின்றது. அடுத்துவரும் மூன்றுவருட காலப்பகுதிக்கும் இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 4.2 பதவியணியினரின் மீள்கட்டமைப்பும் செயலாற்றுகை மதிப்பீடும்

கூட்டுத்தாபனத்தின் பிராந்திய வலையமைப்பு அலுவலர்களுக்கு கணணிகள் மற்றும் தொலைமடல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதுபோன்று தொடர்பாடல் வசதிகளாவன இணையதளத்தின் நுழைவு வசதியுடன் துணையுடன் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் நடப்பு அபிவிருத்தி செயன்முறைகள் உறுதிப்படுத்தப்படல் பொருட்டு பதவியணியினர் மீள் கட்டமைப்பு செய்யப்படுவதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்திற்கான ஆட்சேர்ப்பும் அதுபோன்று பதவி உயர்வு திட்டமும் மீளாய்வு செய்யப்படுவதற்கும் தீர்வுகள் எடுக்கப்பட்டுள்ளன. இது கூட்டுத்தாபனத்தின் பதவியணியினரின் செயலாற்றுகையானது உச்சப்படுத்தப்பட்டதனை உறுதிபடுத்தும் என்பதுடன் அது கூட்டுத்தாபனமானது அதன் முன்நிற்கும் சவால்களை அடுத்து வரும் மூன்று வருடங்களில் வெற்றி கொள்ளப்படுவதற்கு இயலச்செய்யும். பதவியணியினரின் சகல மட்டத்தினரினதும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

## 2016.12.31 இல் உள்ளவாறான ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமை கூற்று

| 31.12.2015<br>ரூபாய் | சொத்துக்கள் | குறிப்புகள் | ரூபாய் | ரூபாய் |
|---|---|---|---|---|
| | **நடப்பல்லாதசொத்துக்கள்** | | | |
| 110,208,071.46 | சொத்து ஆதனம் கருவிகள் | 01 | 100,868,528.94 | |
| 31,442,182.70 | முதிர்ச்சியுற்ற பரப்பெல்லை செலவினம் | 02 | 29,302,731.09 | |
| 33,242,774.25 | முதிர்ச்சியுறா பரப்பெல்லை செலவினம் | 03 | 41,362,272.10 | |
| 806,139.73 | ஏனைய சிறு கருத்திட்டங்கள் | 04 | 949,324.48 | |
| 175,699,168.14 | **மொத்த நடப்பல்லாத சொத்துக்கள்** | | | 172,482,856.61 |
| | **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| 30,130,806.66 | இருப்புகள் | 05 | 28,916,492.36 | |
| 24,410,542.89 | வியாபார கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுகைகள் | 06 | 20,797,900.64 | |
| 4,287,395.21 | வைப்புகள், முற்பணங்கள் | 07 | 4,840,932.10 | |
| 38,846,405.43 | காசும் காசிற்கு சமமானவையும் | 08 | 7,874,272.04 | |
| 97,675,150.19 | **மொத்த நடப்பு சொத்துக்கள்** | | | 62,429,597.14 |
| **273,374,318.33** | **மொத்தச் சொத்துக்கள்** | | | **234,912,453.75** |
| | **உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்** | | | |
| | **உரிமையாண்மை** | | | |
| 40,000,000.00 | முதல் நிலை மூலதனம் | | 40,000,000.00 | |
| 114,881,471.56 | அரச மானியம் | | 123,860,520.72 | |
| 18,916,912.73 | ஏனைய நபர்களிடமிருந்து மானியம் | 09 | 18,529,864.26 | |
| 17,441,846.85 | மூலதன ஒதுக்கீடு | 10 | 17,441,846.85 | |
| 8,550,232.37 | இலாபநட்டக் கணக்கு | | (27,975,179.12) | |
| 199,790,463.51 | **மொத்த உரிமையாண்மை** | | | 171,857,052.71 |
| | **நடப்பல்லாத பரிப்புகள்** | | | |
| 52,470,630.13 | பணிக்கொடை ஏற்பாடு | | 40,060,261.50 | |
| 52,470,630.13 | **மொத்த நடப்பல்லாத பரிப்புகள்** | | 40,060,261.50 | |
| | **நடப்புப் பரிப்புகள்** | | | |
| 21,113,224.69 | வியாபார கடன் கொடுத்தோர்மற்றும் ஏனைய பெறுகைகள் | 11 | 22,995,139.54 | |
| 21,113,224.69 | **மொத்த நடப்பு பரிப்புகள்** | | | 63,055,401.04 |
| **273,374,318.33** | **மொத்த உரிமையாண்மை, பொறுப்புகள்** | | | **234,912,453.75** |

**தர்மசிறி பண்டார கருணாரட்ன**  **மிரில்ல**
**டபிள்யு.**  **எம்.**
**பண்டாரதிலக**  **எம். டி. எஸ். கெ. பீரிஸ்**
**உதவி பொது முகாமையாளர்**
**தலைவர்**  **பிரதி தலைவர்**  **நிதி**

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**கணக்கியல் கொள்கைகள்** – 2016

(1) இலங்கை கணக்கியற் கட்டளைச் சட்டங்களுக்கு அமைவுற கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(2) நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு நிலையான தவணைக் கட்டணங்களாக அதாவது நேர்கோட்டு முறையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நிலையான சொத்து கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தில் கொள்வனவு திகதி கருத்திற்கொள்ளப்பட்டு பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கட்டிடங்களைப் பொறுத்தவரையில் அக்கட்டிடம் பூரணப்படுத்தப்பட்ட திகதி கருத்திற்கொள்ளப்படாது. அக்குறிப்பிட்ட கட்டிடத்தின் நிர்மாண வேலை பூரணப்படுத்தப்பட்ட வருடத்தில் முழு வருடத்திற்குரிய பெறுமானத்தேய்வும் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பெறுமானத்தேய்வு வீதங்கள் வருமாறு:

| | |
|---|---|
| வாகனங்கள் | 20% |
| சொத்து ஆதனம் | 10% |
| அலுவலக கருவிகள் | 10% |
| குழாய்க் கிணறு | 10% |
| தளபாட பொருத்துக்கள் | 06% |
| கட்டிடங்கள் – நிலையானவை | 03% |
| கட்டிடங்கள் – அரை நிலையானவை | 33% |

(3) சொத்தாக கணக்கிடப்படும் சொத்து, ஆதனம் மற்றும் கருவிகளாவன அதன் கொள்விலையில் மதிப்பிடப்படும்.

சொத்து, ஆதனம் மற்றும் கருவிகளாவன ஒரு சொத்தாக மதிப்பீடு செய்யப்பட்ட பின்பு அதன் சாதாரண விலையானது கணிப்பிடப்பட்டு (சாதாரண விலையானது மீள் பெறுமான திகதியில் கணிப்பிடப்படும்) திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு, திரட்டப்பட்ட நட்டங்கள் கழிக்கப்படும்.

(4) இருப்பு மதிப்பீடானது பின்வரும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது:

| | | | |
|---|---|---|---|
| அ. | மரமுந்திரிகை பருப்பு மற்றும் மரமுந்திரிகை ஓட்டின் திரவம் | - | கிரயம் மற்றும் தேறிய சாக்கத்தக்க பெறுமதி – குறைவானது. |
| ஆ. | மரமுந்திரிகை விதைகள் | - | மிதப்பு / சந்தை விலை |
| இ. | செம்மறி ஆடுகள் மற்றும் பால் தரும் விலங்குகள் | - | பிராந்திய சந்தை விலை (நிஜ பாரம்) |
| ஈ. | தெங்கு | - | காசாக்கப்பட்ட பெறுமதி |
| உ. | ஏனைய இருப்புக்கள் | - | கிரய விலையில் |

(5) தலைமை அலுவலக செலவினங்களாவன, கிரய நிலையங்களுக்கு செலவிடப்பட்ட மொத்த சம்பள செலவினங்களின் அடிப்படையில் கிரய நிலையங்களுக்கு இடையில் பகிரப்பட்டது.

(6) தோட்டத்துறையின் பொது செலவினமானது முதிர்ச்சியுற்ற, முதிர்ச்சியுறா பரப்பெல்லை தாவரப் பண்ணை, கால்நடை வளர்ப்பு என்பனவற்றிற்கிடையே உண்மையான தொழில் நாட்களின் அடிப்படையில் பகிரப்பட்டது.

(7) மரமுந்திரிகை மற்றும் தெங்கு முதிர்ச்சி பரப்பெல்லையின் கடன்தீர்வு வருடத்திற்கு 5% ஆகும்.

(8) ஐயக்கடன் தொடர்பிலான ஒதுக்கீடு மொத்த கடன்பட்டோரில் 3.53% ஆகும். ஒதுக்கீட்டு கணக்கானது, இறுதி வருடத்தில் காட்டப்படும் ஐயக்கடன் கணக்கினை பதிவழிக்கும் பொருட்டு மாற்றீடு செய்யப்படும்.

(9) சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களுக்கு செலுத்தப்படவேண்டிய பணிக்கொடை யானது முன்னைய சேவைக்காலத்திற்கு உரியதாக இருப்பின் அது கணக்கியல் ஆண்டில் வருமானத்திற்கு எதிராக விதிக்கப்படும். நடப்பு சேவை காலத்திற்குரிய பணிக்கொடையானது அந்த வருடத்திற்குரிய கணக்கில் பதியப்படும்.

(10) பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்படவேண்டியவைகளின் பெறுமான மதிப்பீட்டின்படி வருமானம் கணிப்பீடு செய்யப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்ட சகல நிபந்தனைகளும் திருப்திப்படுத்தப்பட்டால் பொருட்களின் விற்பனை வருமானம் அங்கீகரிக்கப்படும்.

- முக்கிய அனர்த்தத்தையும் பொருட்களின் உரிமையாண்மையின் வெகுமதியினையும் நிறுவகம் கொள்வனவாளருக்கு மாற்றீடு செய்துள்ளது.
- நிறுவகமானது தனது உரிமையாண்மை அளவிற்கேனும் முகாமைத்துவத் துடனான ஈடுபடலினையும் அத்துடன் விற்கப்பட்ட பொருட்கள் மீதான கட்டுப்பாட்டினையும் தொடர்ந்து வைத்திருக்கவில்லை.
- வருமானத் தொகையினை அளவிடலாம்.
- கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய பொருளியல் நன்மைகள் நிறுவகத்தை அடைவதற்கான சாத்தியங்கள் உண்டு.
- கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் செலவிடப்பட்ட அல்லது செலவிடப்படவுள்ள கிரயத்தை அளவிடலாம்.

(11) கூட்டுத்தாபனத்திற்குரிய மூலதன மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பு மூலதன மானியத்திற்கான நிலையான சொத்துக்கள் இனங்காணப்பட்டு அந்த மானியமும் மற்றும் கணக்கியல் கட்டளை சட்டங்களுக்கு அமைய நீண்டகால சொத்தாக இனங்காணப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளும் மூலதனமாக்கப்படும். பெறுமானத்தேய்வு மற்றும் கடன்தீர்வு அடிப்படையில் கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்ட உண்மையான பெறுமானமானது, மூலதன சொத்துக்களிலிருந்து பதிவழிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அதற்கு சமமான ஒரு பெறுமதி மூலதன மானியத்திலிருந்து ஒரு வருமானமாக இனங்காணப்படும்.

(12) மோட்டார் வாகனத்தின் மீள் மதிப்பீடு செல்லுபடியாகும் திகதியானது 2009.01.01 என்பதுடன் மீள் மதிப்பீடானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனத்தின் இயந்திரவியலாளர் ஒருவரினால் தலைமைத்துவம் வகிக்கப்பட்ட சுயாதீன குழுவினால் மேற்கொள்ளப்படும்.

(13) ஒட்டு மரமுந்திரிகைகள் விதையிடல், நாற்றுக்களின் உற்பத்தி என்பனவற்றிற்கு ஏற்பட்ட நிர்வாக செலவினமானது, சேவை மற்றும் வர்த்தக நிலையங்களுக் கிடையே உற்பத்தி செய்யப்பட்ட தாவரங்களின் உண்மையான எண்ணிக்கைக்கு அமைய பகிரப்பட்டது.

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**கணக்கியலுக்கான குறிப்புகள்**

(1) 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய நிதியியல் கூற்றுக்களாவன, பணிப்பாளர் சபையினால் 2017 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது.

(2) வியாபாரத்தின் தன்மையும் பிரதான நடவடிக்கைகளும் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனமானது விவசாயத்துடன் தொடர்புடைய ஒரு வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பதுடன் கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகளாவன கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- தோட்டத்துறையில் மரமுந்திரிகை தாவரங்கள் பயிர்ச்செய்கை செய்யப்பட்டதுடன் பச்சை மரமுந்திரிகைகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- தாவர விநியோகிப்பு நிலையங்களில் நடுகை திரவியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- வர்த்தக அடிப்படையிலான நாற்றுப்பண்ணைகளில், ஒட்டு மற்றும் விதையிடல் மூலமான மரமுந்திரிகை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- 18 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில், மரமுந்திரிகை பயிர்ச்செய்கை செய்யும் விவசாயிகளுக்கு அவர்களது சொந்த நிலங்களில் பயிர்ச்செய்கை செய்தல் பொருட்டு, மானிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்துகை செய்யப்பட்டது.
- செயன்முறையாக்கல் நிலையங்களில், மரமுந்திரிகை பருப்புகள் மற்றும் பெறுமானம் சேர் மரமுந்திரிகைகள் என்பன உற்பத்தி செய்யப்பட்டன.
- மரமுந்திரிகை பழங்களை பயன்படுத்தி மரமுந்திரிகை வைன் உற்பத்தி செய்யப்பட்டது.
- பெறுமானம் சேர்க்கப்பட்ட மரமுந்திரிகைகளாவன கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில், கூட்டுறவு நிலையங்களில் மற்றும் ஏனைய நிறுவனங்களில் விற்கப்படல்.
- மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மற்றும் செயன்முறை தொழில்நுட்பங்கள் தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துகை செய்தல்.

(3) கொழும்பு 01 இலுள்ள தொழில் நியாயச்சபையில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ஒரு வழக்கானது கூட்டுத்தாபனத்தின் முன்னைய முகாமையாளரால் அதாவது, சந்தைப்படுத்துகை மற்றும் செயன்முறை எனும் விடயத்திற்கு பொறுப்பாகவிருந்த முன்னைய முகாமையாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி கூட்டுத்தாபனத்திடமிருந்து ஒரு நஷ்ட ஈடு இவரால் கோரப்பட்டுள்ளது. இவர் இராஜினாமா செய்யவேண்டிய சூழ்நிலைக்கு நிர்ப்பந்தமாக உட்படுத்தப்பட்டார் என்பதே இவரினால் தொடரப்பட்ட வழக்காகும். இவ் வழக்கு தொடர்பில் இதுவரையிலும் எதுவித இறுதித் தீர்ப்பும் வழங்கப்படவில்லை.

(4) நிதியியல் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பிலான அளவீட்டின் அடிப்படை.

நிதியியல் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பிரயோகிக்கப்பட்டுள்ள அளவீடானது தரப்பட்டுள்ளவாறு முன்னெடுக்கப் பட்டுள்ளதுடன், தேவையான இடங்களில் கணக்கியல் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

(5) பணிக்கொடை ஏற்பாடானது அவர்களின் சம்பளம் (சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு அமைவுற) மற்றும் சேவைக் காலம் என்பனவற்றிற்கு அமைவுற கணிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு காரணம் இவ்விடய கணிப்பீடு துறையில் நிபுணத்துவம் பெற்ற நிபுணர் ஒருவரினை உசாவுதல் செய்வதற்கு போதிய நிதி வசதி இன்மையே ஆகும்.

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**குறிப்பு 01**

**சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள்**

| சொத்து | 01.01.2016 இல் உள்ளவாறாக கிரயம், மீள்பெறுமானமிடப்பட்ட பெறுமதி (ரூபாய்) | வருட காலப்பகுதியில் சேர்ப்பு/மீள்பெறுமான மதிப்பீடு (ரூபாய்) | வருட காலப்பகுதியில் விற்பனை/மாற்றீடு (ரூபாய்) | 2016.12.31 இல் கிரயம்/மீள்பெறுமான மதிப்பீடு (ரூபாய்) | 2016.12.31 இல் உள்ளவாறான திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு (ரூபாய்) | 2016.12.31 இல் உள்ளவாறான குறைத்து எழுதப்பட்ட மிகுதி (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| நிலம் | 23,536,722.37 | 2,250,000.00 | - | 25,786,722.37 | - | 25,786,722.37 |
| கட்டிடம் (நிரந்தரம்) | 44,305,645.15 | 608,792.00 | - | 44,914,437.15 | 17,341,445.36 | 27,572,991.79 |
| கட்டிடம் (குறை நிரந்தரம்) | 243,710.00 | 196,701.00 | - | 440,411.00 | 192,383.08 | 248,027.92 |
| மோட்டார் வாகனம் | 98,603,365.84 | 1,384,065.00 | - | 99,987,430.84 | 66,457,970.79 | 33,529,460.05 |
| ஆதனம், இயந்திரம் | 15,159,406.98 | 1,266,090.00 | - | 16,425,496.98 | 11,274,509.94 | 5,150,987.04 |
| கருவிகள், உபகரணங்கள் | 8,179,119.92 | 856,280.82 | - | 9,035,400.74 | 7,347,903.16 | 1,687,497.58 |
| அலுவலக கருவிகள் | 10,549,458.99 | 374,862.50 | - | 10,924,321.49 | 8,597,515.18 | 2,326,806.31 |
| தளபாடமும் பொருத்துகளும் | 6,887,972.32 | 209,261.00 | - | 7,097,233.32 | 4,441,946.49 | 2,655,286.83 |
| குழாய்க் கிணறு | 826,682.00 | 131,701.50 | - | 958,383.50 | 526,155.49 | 432,228.01 |
| வேளாண்மை கிணறு | 1,110,755.66 | 69,750.74 | - | 1,180,506.40 | 310,809.98 | 869,696.42 |
| தாங்கி | 608,824.62 | - | - | 608,824.62 | - | 608,824.62 |
| | **210,011,663.85** | **7,347,504.56** | **-** | **217,359,168.41** | **116,490,639.47** | **100,868,528.94** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**குறிப்பு - 02**
**முதிர்ச்சியுற்ற பரப்பெல்லை செலவினம்**

| | | (ரூபாய்) |
|---|---|---|
| மரமுந்திரிகை | அட்டவணை 2அ | 27,290,932.37 |
| தெங்கு | அட்டவணை 2ஆ | 2,011,798.72 |
| | **மொத்தம்** | **29,302,731.09** |

**அட்டவணை 2அ**
**முதிர்ச்சியுற்ற பரப்பெல்லை - மரமுந்திரிகை**

| தோட்டத்துறை | 2016.01.01 இல் உள்ளவாறாக முதிர்ச்சியுறும் வரையில் கிரயம் (ரூபாய்) | 2016.12.31 இல் உள்ளவாறாக கடன் தீர்விற்கான ஒதுக்கீடு (ரூபாய்) | 2016.12.31 இல் உள்ளவாறாக தேறிய பெறுமதி (ரூபாய்) |
|---|---|---|---|
| ஹாடி தோட்டத்துறை | 2,736,310.00 | 1,797,539.35 | 938,770.65 |
| கமன்டலுவ தோட்டத்துறை | 14,708,944.94 | 11,007,531.17 | 3,701,413. |
| புத்தளம் தோட்டத்துறை | 30,069,888.71 | 19,590,822.69 | 10,479,066.02 |
| எலுவம்குளம் செடி பகிர்வு நிலையம் | 13,933,185.28 | 9,568,897.08 | 4,364,288.20 |
| விலாச்சியா செடி பகிர்வு நிலையம் | 655,569.86 | 163,184.29 | 492,385.57 |
| நாலந்த செடி பகிர்வு நிலையம் | 5,806,871.57 | 1,116,210.19 | 4,690,661.38 |
| மஹாஓயா செடி பகிர்வு நிலையம் | 1,150,848.05 | 172,627.20 | 978,220.85 |
| மொனராகல செடி பகிர்வு நிலையம் | 1,936,618.75 | 290,492.82 | 1,646,125.93 |
| **மொத்தம்** | **70,998,237.16** | **43,707,304.79** | **27,290,932.37** |

**அட்டவணை 2ஆ**
**முதிர்ச்சியுற்ற பரப்பெல்லை – தெங்கு**

| தோட்டத்துறை | 2016.01.01 இல் உள்ளவாறாக முதிர்ச்சியுறும் வரையில் கிரயம் (ரூபாய்) | 2016.12.31 இல் உள்ளவாறாக கடன் தீர்விற்கான ஒதுக்கீடு (ரூபாய்) | 2016.12.31 இல் உள்ளவாறாக தேறிய பெறுமதி (ரூபாய்) |
|---|---|---|---|
| ஹாடி தோட்டத்துறை | 1,369,822.51 | 547,929.04 | 821,893.47 |
| கமன்டலுவ தோட்டத்துறை | 2,437,612.22 | 1,323,305.04 | 1,114,307.18 |
| புத்தளம் தோட்டத்துறை | 431,998.76 | 356,400.69 | 75,598.07 |
| | **4,239,433.49** | **2,227,634.77** | **2,011,798.72** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**குறிப்பு - 03**
**முதிர்ச்சியுறா பரப்பெல்லை செலவினம்**

| | | (ரூபாய்) |
|---|---|---|
| மரமுந்திரிகை | அட்டவணை 3அ | 36,419,064.76 |
| தெங்கு | அட்டவணை 3ஆ | 4,943,207.34 |
| | **மொத்தம்** | **41,362,272.10** |

**அட்டவணை 3அ**
**முதிர்ச்சியில்லா பரப்பெல்லை - மரமுந்திரிகை**

| தோட்டத்துறை | 2016.12.31 இல் உள்ளவாறான கிரயம் (ரூபாய்) |
|---|---|
| ஹாடி தோட்டத்துறை | 2,387,604.09 |
| கமன்டலுவ தோட்டத்துறை | 3,466,516.96 |
| புத்தளம் தோட்டத்துறை | 3,831,322.18 |
| எலுவம்குளம் செடி பகிர்வு நிலையம் | 748,390.43 |
| மாங்கேணி தோட்டத்துறை | 1,315,572.56 |
| எலகதுவ செடி பகிர்வு நிலையம் | 152,382.00 |
| மஹாஓயா செடி பகிர்வு நிலையம் | 520,906.45 |
| மொனராகல செடி பகிர்வு நிலையம் | 345,338.70 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 1,598,496.77 |
| நதகமுவ செயன்முறை நிலையம் | 135,360.40 |
| ஒயாமதுவ செடி பகிர்வு நிலையம் | 10,078,258.69 |
| விலாச்சியா செடி பகிர்வு நிலையம் | 21,783.98 |
| கொண்டாச்சி செடி பகிர்வு நிலையம் | 11,817,131.55 |
| **மொத்தம்** | **36,419,064.76** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**அட்டவணை 3ஆ**
**முதிர்ச்சியில்லா பரப்பெல்லை – தெங்கு**

| தோட்டத்துறை | 2016.12.31 இல் உள்ளவாறான கிரயம் (ரூபாய்) |
|---|---|
| ஹாடி தோட்டத்துறை | 2,099,344.16 |
| கமன்டலுவ தோட்டத்துறை | 995,672.68 |
| புத்தளம் தோட்டத்துறை | 630,182.49 |
| ஒயாமதுவ செடி பகிர்வு நிலையம் | 1,218,008.01 |
| | **4,943,207.34** |

**குறிப்பு - 04**
**ஏனைய சிறு கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | 2016.12.31 இல் உள்ளவாறான கிரயம் (ரூபாய்) |
|---|---|
| தேக்கு மரக் கருத்திட்டம் | 482,874.09 |
| கருங்காலி மரக் கருத்திட்டம் | 40,000.00 |
| பப்பாளி கருத்திட்டம் | 368,594.66 |
| வாழை/தோடம்பழ வகை சார் கருத்திட்டம் | 10,800.00 |
| திப்பட்டு கருத்திட்டம் | 47,055.73 |
| | **949,324.48** |

**குறிப்பு - 05**

| இருப்பு | (ரூபாய்) |
|---|---|
| சில்லறை | 3,268,416.56 |
| திராட்சை பழச்சாறு/கிதுல் பாணி | 188,117.27 |
| மரமுந்திரிகை பருப்பு | 12,411,594.01 |
| பச்சை மரமுந்திரிகைகள் | 8,915,360.00 |
| தாவரங்கள் | 2,708,562.36 |
| பொதியிடல் சாதனங்கள் | 1,404,454.16 |
| தெங்கு | 19,988.00 |
| | **28,916,492.36** |

**குறிப்பு - 06**
**வியாபார கடன்பட்டோர் ஏனைய பெறுகைகள்**

| | | (ரூபாய்) |
|---|---|---|
| வியாபார கடன்பட்டோர் | 2,314,600.60 | |
| **கழிக்க**: அ. மு. கடன் ஒதுக்கீடு | 81,706.00 | 2,232,894.60 |
| சில்லறை கடன்பட்டோர் | 20,208,598.04 | |
| கழிக்க: செயற்படாமையினால் நட்டம் | 1,643,592.00 | 18,565,006.04 |
| | | **20,797,900.64** |

**குறிப்பு - 07**
**வைப்புகள், முற்பணங்கள்**

| | (ரூபாய்) |
|---|---|
| முற்பணம் | 16,500.00 |
| முற்பணக் கொடுப்பனவு | 170,838.60 |
| வைப்புகள் | 4,653,593.50 |
| | **4,840,932.10** |

**குறிப்பு - 08**
**காசும் காசிற்கு சமமானவையும்**

| | (ரூபாய்) |
|---|---|
| வழிப்போக்கிலுள்ள காசு | 22,800.00 |
| வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு | 7,851,472.04 |
| மொத்தம் | **7,874,272.04** |

**குறிப்பு - 09**

**ஏனையவர்களிடமிருந்து மானியம்**

| | (ரூபாய்) |
|---|---|
| வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி கருத்திட்டம் | 6,569,892.91 |
| துணை தோட்டப்பயிர் அபிவிருத்தி அமைச்சு | 1,612,451.80 |
| சிறு ஏற்றுமதி பயிர் மேம்படுத்துகை அமைச்சு | 10,347,519.55 |
| **மொத்தம்** | **18,529,864.26** |

**இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்**

**குறிப்பு - 10**

**மூலதன ஒதுக்கீடுகள்**

| | (ரூபாய்) |
|---|---|
| மீள் மதிப்பிடல் ஒதுக்கீடு - வாகனங்கள் | 16,929,116.63 |
| ஏனைய மூலதன ஒதுக்கீடுகள் | 512,730.22 |
| **மொத்தம்** | **17,441,846.85** |

**குறிப்பு - 11**

**நடப்புப் பொறுப்புகள்**

| | (ரூபாய்) |
|---|---|
| சில்லறை கடன் கொடுத்தோர் | 16,412,779.70 |
| நிலுவைச் செலவினங்கள் | 6,582,359.84 |
| **மொத்தம்** | **22,995,139.54** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்
## வர்த்தகத் துறை
### 31.12.2016 இல் முடிவுற்ற வருடத்திற்கான விரிவான வருமானத்தின் ஒன்றிணைக்கப்பட்ட கூற்று

| 31.12.2015 | விபரங்கள் | 31.12.2016 |
|---|---|---|
| | **விற்பனை** | |
| 67707424.80 | மரமுந்திரிகை பருப்பு | 86,194,216.09 |
| 3004850.00 | மரமுந்திரிகை தாய் விதைகள் | 2,121,515.00 |
| 3157500.00 | மரமுந்திரிகை செடிகள் | 5,210,800.00 |
| 1481898.19 | தெங்கு | 1,425,600.50 |
| (55122.80) | உட்திரும்பல் | (46,496.00) |
| **75296550.19** | **தேறிய விற்பனை** | **94,905,635.59** |
| | **விற்பனைக்கிரயம்** | |
| 1188845.97 | இருப்பில் (அதிகரிப்பு)/குறைவு | (1,868,861.98) |
| 166617.83 | செடி உற்பத்திகளின் கிரயம் | 741,976.96 |
| 22998006.00 | பருப்பு உற்பத்திகளின் கிரயம்/மேந்தலை செலவுகள் | 38,613,263.18 |
| 21355753.45 | முதிர்ச்சியுற்ற பரப்பெல்லையின் நிர்வாக செலவினம் | 24,383,333.74 |
| 9345547.13 | முதிர்ச்சியுற்ற பரப்பெல்லையின் நேரடி செலவினம் | 6,777,772.26 |
| 55054770.38 | மொத்த விற்பனை கிரயம் | 68,647,484.16 |
| **20241779.81** | **மொத்த இலாபம்/(நட்டம்)** | **26,258,151.43** |
| | **செலவினம்** | |
| 16102968.44 | நிர்வாக செலவினம் (செயன்முறை நிலையங்களும் தாவர பண்ணைகளும்) | 19,992,240.51 |
| **4138811.37** | **கடன் தீர்வுக்கு முன்பு இலாபம்/(நட்டம்)** | **6,265,910.92** |
| 3283050.99 | கடன் தீர்வு | 3,351,365.57 |
| **855760.38** | **கடன் தீர்வுக்கு பின்பு இலாபம்/(நட்டம்)** | **2,914,545.35** |
| 227361.39 | திராட்சை பழச்சாறு மற்றும் கிதுல் பாணி இலாபம்/(நட்டம்) | 352,698.68 |
| 33500.00 | செயன்முறை கருவிகள் இலாபம்/(நட்டம்) | 105,000.00 |
| (152344.97) | பப்பாளி கருத்திட்டம் இலாபம்/(நட்டம்) | (204,645.68) |
| - | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் இலாபம்/(நட்டம்) | 58,407.55 |
| (1266682.36) | விலங்கு வளர்ப்பு இலாபம்/(நட்டம்) | - |
| **(302405.56)** | **தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **3,226,005.90** |
| | **ஏனைய வருமானம்** | |
| 27798000.00 | அரச மானியம் (நடப்பு) | 16,922,573.08 |
| 10168605.39 | நிலையான சொத்து விற்பனை இலாபம்/(நட்டம்) | - |
| - | சீராக்கல் ஒதுக்கீடு குறைவு/(அதிகமாக) | 8,752,506.76 |
| 2451182.75 | வட்டி வருமானம் | 1,563,437.62 |
| 2512401.14 | சில்லறை வருமானம் | 17,596,700.93 |
| 2291036.81 | கடன் தீர்வு - ஏனைய நபர்களிடமிருந்து மானியம் | 2,717,036.82 |
| **45221226.09** | **ஏனைய மொத்த வருமானம்** | **47,552,255.21** |
| | **ஏனைய செலவினம்** | |
| 27897829.00 | நிர்வாக செலவினம் (தலைமையலுவலகம்) | 19,148,189.25 |
| **17020991.53** | **தேறிய இலாபம்/(நட்டம்)** | **31,630,071.86** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்
## சேவைப் பிரிவு

| 31.12.2015 | 2016.12.31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய வருமான செலவின கணக்கு | | ரூபாய் |
|---|---|---|---|
| | **வருமானம்** | | |
| 23382225.18 | அரச மானியம் - மூலதனம் - நடப்பு வருடம் | | 21,870,362.74 |
| | - கடன் தீர்வு | | |
| 2318239.65 | ஏனைய சொத்துக்கள் | | 2,760,588.10 |
| 3195000.00 | 03 வாகனங்கள் | | 3,834,000.00 |
| 38302000.00 | - நடப்பு | | 31,077,426.92 |
| | **சில்லறை வருமானம்** | | |
| - | மேலதிக ஒதுக்கீடு சீராக்கம் | 220800.00 | |
| 111620.00 | - விஸ்தரிப்பு சேவைகள் | 2056.42 | |
| 26455.00 | - ஆராய்ச்சி, அபிவிருத்தி | 352400.00 | 575,256.42 |
| **67335539.83** | **மொத்த வருமானம்** | | **60,117,634.18** |
| | **கழிக்க:** | | |
| | செலவினம் | | |
| 38438172.65 | தலைமையலுவலகம் | 35164655.48 | |
| 23382225.18 | மூலதன மானியத்தின் கீழ் | 21870362.74 | |
| 51705959.87 | விஸ்தரிப்பு சேவை | 60540353.94 | |
| 12114885.83 | மத்திய தாவர பண்ணைகள் | 2,816,646.19 | |
| 3891016.26 | ஆராய்ச்சி, அபிவிருத்தி | 4,087,590.92 | |
| 569763.68 | ஒயாமதுவ செடி பகிர்வு நிலையம் | 918,419.76 | |
| 1982549.66 | கொண்டச்சி செடி பகிர்வு நிலையம் | 2,875,088.50 | |
| 132084573.13 | **மொத்த செலவினம்** | | 128,273,117.53 |
| **(64749033.30)** | வருடகாலப் பகுதியில் வருமானத்தை விஞ்சிய செலவினமானது, ஒன்றிணைக்கப்பட்ட இறுதி இலாப நட்ட கணக்குக்கு மாற்றப்பட்டது. | | **(68,155,483.35)** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்
## இறுதி கூட்டிணைவு

| **31.12.2015** | **2016.12.31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய விரிவான வருமான கூற்று** | | |
|---|---|---|---|
| ரூபாய் | | | ரூபாய் |
| 17,020,991.32 | வர்த்தக துறையில் உழைக்கப்பெற்ற தேறிய இலாபம்/நட்டம் | | 31,630,071.86 |
| (64,749,033.30) | வருடத்தில் வருமானத்தை விஞ்சிய செலவினம் - சேவைத்துறை | | (68,155,483.35) |
| **(47,728,041.98)** | | | **(36,525,411.49)** |
| 56,278,274.35 | இலாப/நட்டம் முன் கொண்டு வந்தது | 8,550,232.37 | |
| 56,278,274.35 | | | 8,550,232.37 |
| **8,550,232.37** | **இலாப/நட்டம் முன் கொண்டு சென்றது** | | **(27,975,179.12)** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**காசுப்பாய்ச்சல் கூற்று**

**2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான திரட்டப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று**

| 2015.12.31 (ரூபாய்) | | 2016.12.31 இல் முடிவுற்ற வருடம் (ரூபாய்) | (ரூபாய்) |
|---|---|---|---|
| | **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| (47,728,041.98) | வருடத்திற்கான நட்டம் | | (36,525,411.49) |
| | **காசுப்பெயர்ச்சிகளில் உள்ளடங்காதவைகளில் சீராக்கம்** | | |
| 17,695,062.67 | பெறுமானத் தேய்வு | 16,687,047.08 | |
| 3,437,424.54 | தோட்டத்துறை சொத்துக்களின் கடன் தீர்வு | 3,505,738.91 | |
| 12,242,906.37 | பணிக்கொடை ஏற்பாடு | 394,830.26 | |
| 384,277.97 | பதிவழிக்கப்பட்ட அ.மு.கடன், செயற்படாமையினால் நட்டம் | 317,055.04 | |
| (5,395,119.99) | விற்கப்பட்ட நிலை. சொத். இலாபம் | - | |
| (4,773,485.40) | இலாபநட்ட க/கு இல் பதிவழிக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடு | - | |
| 21,846.87 | களவினால் நட்டம் - கருவி, உபகரணம் | - | |
| 1,046,491.00 | பதிவழிக்கப்பட்ட மூலதன நடைமுறை வேலை | - | |
| 237,187.85 | பதிவழிக்கப்பட்ட ஏனைய சிறு கருத்திட்டங்கள் | - | |
| - | பணிக்கொடை மேலதிக ஒதுக்கீடு இலாபநட்ட க/கு | (8,752,506.76) | |
| (226,011.65) | ஏனைய நபர்களிடமிருந்து மானியம் | (387,048.47) | |
| 261,468.96 | முதிர்வுற்ற பரப்பெல்லையில் சீராக்கம் (ஹாடி) | - | |
| (31,186,501.64) | அரச மானிய கடன் தீர்வு | (31,020,950.84) | |
| **(6,254,452.45)** | | | **(19,255,834.78)** |
| **(53,982,494.43)** | நடைமுறை மூலதனத்தில் உள்ளவைகளில் மாற்றங்கள் ஏற்பட முன்பு தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்) | | **(55,781,246.27)** |

**இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்**

**நடைமுறை மூலதனத்தில் உள்ளவைகளில் மாற்றம்**

| | | | |
|---|---|---|---|
| 18,581,307.76 | இருப்பு - (அதிகரிப்பு)/குறைவு | 1,214,314.30 | |
| 48,085.69 | கடன்பட்டோர் - (அதிகரிப்பு)/குறைவு | 3,295,587.21 | |
| 5,792,348.03 | முற்பண கொடுப்பனவுகள் - (அதிகரிப்பு)/குறைவு | (553,536.89) | |
| (2,132,590.15) | கடன் கொடுநர் - அதிகரிப்பு/குறைவு | 4,633,945.04 | |
| (1,758,747.05) | நிலுவைச் செலவினங்கள் - (அதிகரிப்பு/குறைவு) | (2,752,030.19) | |
| **20,530,404.28** | | | **5,838,279.47** |
| (33,452,090.15) | | | (49,942,966.80) |
| (2,186,852.25) | பணிக்கொடை ஏற்பாடு | | (4,052,692.13) |
| | பாவிக்கப்பட்ட தொழிற்பாட்டு | | |
| **(35,638,942.40)** | செயற்பாடுகளிலிருந்து பிறப். வரு. | | **(53,995,658.93)** |
| | **முதலீட்டு செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்** | | |
| (18,969,771.51) | நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (7,347,504.56) | |
| (7,389,946.53) | புதிய கட்டிடத்தில் முதலீடு | (9,485,785.15) | |
| 5,395,125.95 | சொத்து, ஆதனம், கருவி விற்பனை வரும்படி | - | |
| (428,733.20) | ஏனைய சிறு கருத்திட்டங்களில் முதலீடு | (143,184.75) | |
| (21,393,325.29) | | | (16,976,474.46) |
| **(57,032,267.69)** | | | **(70,972,133.39)** |
| | **நிதி செயற்பாடுளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| 35,000,000.00 | அரச மானியம் | | 40,000,000.00 |
| (22,032,267.69) | காசுக்கு சமமானவைகளில் அதிகரிப்பு | | (30,972,133.39) |
| | வருடதொடக்கத்தில் காசுக்கு | | |
| 60,878,673.12 | அமமானவயும் **(குறிப்பு -01)** | | 38,846,405.43 |
| **38,846,405.43** | | | **7,874,272.04** |

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

**<u>குறிப்பு - 01</u>**

| | 2016.01.01 இல் உள்ளவாறாக | 2016.12.31 இல் உள்ளவாறாக |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசும் கையிலுள்ள காசும் | 38,724,327.43 | 7,851,472.04 |
| வழிப்போக்கிலுள்ள காசு | 122,078.00 | 22,800.00 |
| | **38,846,405.43** | **7,874,272.04** |

## 2016.12.31 இல் முடிவுற்ற வருடத்திற்கான உரிமையாண்மை கூற்றில் மாற்றம்

| மாற்றங்கள் | முதல் நிலை மூலதனம் | அரச மானிய மூலதனம் | NECCD யிடமிருந்து மானியம் | MSPCD யிடமிருந்து மானியம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு | ஏனைய மூலதன ஒதுக்கங்கள் | MMECP யிடமிருந்து மானியம் | இலாபநட்டக் கணக்கு | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2016.01.01 இல் உள்ளவாறான மிகுதி | 40,000,000.00 | 114,881,471.56 | 6,795,904.56 | 1,612,451.80 | 16,929,116.63 | 512,730.22 | 10,508,556.37 | 8,550,232.37 | 199,790,463.51 |
| வருடகாலப் பகுதியில் கிடைத்த மானியம் | - | 40,000,000.00 | - | - | - | - | - | - | 40,000,000.00 |
| இலாபநட்டக் கணக்கு மாற்றீடு | - | (31,020,950.84) | (226,011.65) | - | - | - | (161,036.82) | - | (31,407,999.31) |
| வருட காலப் பகுதியில் தே. இலாபம்/நட்டம் | - | - | - | - | - | - | - | (36,525,411.49) | (36,525,411.49) |
| 2016.12.31 இல் உள்ளவாறான மிகுதி | 40,000,000.00 | 123,860,520.72 | 6,569,892.91 | 1,612,451.80 | 16,929,116.63 | 512,730.22 | 10,347,519.55 | (27,975,179.12) | 171,857,052.71 |

NECCD - வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி கருத்திட்டம்
MSPCD - துணை தோட்டப்பயிர்கள் அபிவிருத்தி அமைச்சு
MMECP - சிறு ஏற்றுமதி பயிர் மேம்படுத்துகை அமைச்சு

මගේ අංකය / எனது இல. / My No. } ஏதீஎல்/சீ/எஸ்எஸ்சீ/01/16/எல்ஏ    ඔබේ අංකය / உமது இல. / Your No }    දිනය / திகதி / Date } 2017 மே 31

தலைவர்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கயமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11ஆம் இலக்க அரசாங்க விவசாயக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2017 மே 09 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர்கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி . நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்க எல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளின் மூலம் கணக்காய்வு தலைமை அதிபதிக்குதற்றுணிவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07**

நியமத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வகைப்படுத்தல் மேற்கொண்ட முறைமை மற்றும் நியமத்தின் 31 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் முகாமைத்துவ ஆபத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 79(பீ) பந்தியின் பிரகாரம் மூலதண ஒதுக்கங்களின் தன்மைகள் நிதிகூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி உபகரணங்களை இணங்காணலும் அளவீடு செய்தலும் மற்றும் கூட்டுத்தாபனத்திற்குச்

சொந்தமான உயிரியல் சொத்துக்களை இனம்காணலும் கணக்கீடு செய்தலும் என்பவற்றுக்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வேளையைத் தவிர்த்து வருமானங்களை செலவுக்கு எதிரீடு செய்ய முடியாது என்ற போதிலும் பப்பாசிச் செயற்திட்டத்தின் ரூபா 127,617 தொகையான வருமானம் ரூபா 332,262 தொகையான செலவுகளுக்கு எதிரீடு செய்யப்பட்டு நிதிகூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 02**

கிரயத்தை வெவ்வேறாகக் கணிப்பிட்டு இருப்புக்களை மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக அனைத்து உற்பத்திகளினதும் சராசரி கிரயத்தின் பிரகாரம் இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததனால் நிதிகூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 12,411,594 தொகையான முந்திரிகை சார்ந்த உற்பத்திகளின் சந்தை விலை சராசரி கிரயத்தை விட குறைந்த பெறுமதியையே கொண்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 16**

(i) நியமத்தின் 55 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு ஆயத்தமான நிலைக்கு கொண்டுவந்த திகதியிலிருந்து பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் கட்டிடத்திற்காக பெறுமானத் தேய்வு செய்யும் போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட திகதியைக் கருத்திற்கொள்ளாமல் முழு ஆண்டிற்காகவும் பெறுமானத்தேய்வு செய்யும் வகையில் கொள்கை இனங்காணப்பட்டிருந்தது.

(ii) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான விளைதிறனான ஆயட்காலத்தை மீளாய்வு செய்யாததன் காரணமாக ரூபா 22,921,312 கிரயமுள்ள 19 மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க ஏற்பட்டுள்ள மதிப்பீட்டுக் குறைபாடுகள் இலங்கை கணக்கீட்டு நியமம்-08 இன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 73 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றுக்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு விற்றுத்தீர்க்கப்பட்ட செத்துக்களின் பெறுமானத் தேய்வு என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 19**

(i) நியமத்தின் 57 ஆம் பிரிவின் பிரகாரம் தகைமை பெற்ற தொழில்சார் மதிப்பீட்டாளரினால் அனைத்து பொருண்மையான சேவைக்குப் பின்னரான நலன்களை அளவீடு செய்தல் (Actuarial Valuation Method) மீதான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் பிரகாரம் ஊழியர் நலன் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் உரிய முறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செலுத்தவேண்டிய மீதிகளின் மொத்த பெறுமதி ரூபா 16,412,780 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 8,929,887 ஆகவும் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 600,000 ஆகவும் இருந்தது.

(ஆ) பெறவேண்டிய கணக்குள் ரூபா 22,523,199 மொத்த தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 13,230,715 தொகையானது 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியாக இருந்ததுடன் 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 5,896,600 ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாட்டுக் கணக்கில் ரூபா 1,499,709 மீதி காணப்பட்ட போதிலும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் செந்தமான முறைப்படியான உடன்படிக்கையின்றி பயன்படுத்துகின்ற காணிகளுக்காக குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | 2011/2012, 2012/2013, 2013/2014, 2014/2015, 2015/2016 ஆகிய மதிப்பீட்டு ஆண்டுகளின் வருமானவரி கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அல்லது வருமான வரியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டம் மற்றும் 2009 இன் 09 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டம். | மொத்தமாக மற்றும் சில்லறை அடிப்படையில் பொருட்களை வழங்குதல் மற்றும் பொருட்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனம் ஒன்றாக இருக்கும் போது மற்றுமொரு காலாண்டிற்கான கிரயம் ரூபா 3.75 மில்லியனுக்கு அதிகமாக அல்லது வருடாந்த கிரயம் ரூபா 15 மில்லியனுக்கு மிகையாக இருக்கும் போது பெறுமதி சேர் வரி மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 அரசாங்கப் பெறுவனவு வழி காட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பந்தி | கொண்டச்சி தோட்டத்தில் ஒரு ஏக்கர் ரூபா 13,500 படி 100 ஏக்கர் காடுகளைத் துப்பரவு செய்வதற்காக ரூபா 1,350,000 தொகையான ஒப்பந்தம் வங்கப்பட்டிருந்த |

போதிலும் செயலாற்றல் முறி ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த ஒப்பந்தகாரர் வேலையை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததனால் பின்னர் கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளுக்கு முரணாக 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பேரில் ஏனைய நபர்களுக்கு அந்த நடவடிக்கை வழங்கப்பட்டிருந்தது. ஒரு ஏக்கர் ரூபா 15,000 படி 100 ஏக்கர்களுக்காக ரூபா 1,500,000 தொகை 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 36,525,411 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 47,728,042 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறையில் ரூபா 11,202,630 தொகையான குறைவு அவதானிக்கப்பட்டது. வணிகப் பிரிவின் வருமானம் ரூபா 19,609,806ஆல் அதிகரித்தல் மற்றும் சேவை நிலையத்தின் வருமானம் ரூபா 3,406,450 ஆல் குறைவடைதல் இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய நான்கு ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 44,233,832 தேறிய இலாபமாக இருந்த போதிலும் அது தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2015 ஆம் ஆண்டின் போது தேறிய நட்டம் ரூபா 47,728,042 ஆக இருந்தது. 2016ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு வருமானம் ஒன்றல்லாத காணி இழப்பீட்டுப் பணம் மற்றும் பணிக்கொடைக்கான மிகை ஒதுக்கீடுகள் ரூபா 22,746,506 மொத்த தொகையை செம்மையாக்கியதன் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது தேறிய நட்டம் ரூபா 36,525,411 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வுகளைக் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 121,065,660 தொயையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 87,183,875 ஆக மாறியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1972 இன் 11ஆம் இலக்க அரசாங்க விவசாயக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தைத் தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோளானது மரமுந்திரிகை பயிரிடல், உற்பத்தி செயன்முறை மற்றும் கொள்வனவு செய்தல், சந்தைப்படுத்தல் தொடர்பாக திட்டங்களைத் தயாரித்தல், புலனாய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சந்தைப்படுத்தல் தொடர்பான மற்றும் ஏனைய தகவல்களைச் சேகரித்தல், தயாரித்தல், பகிரங்கப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல், மரமுந்திரிகை சார்ந்த உற்பத்திகளைச் செயன்முறைப்படுத்துவதற்காக தேவையான நபர்களுக்கு பயிற்சியளித்தல் உலக சந்தைக்கான உற்பத்தி பொருட்களுக்குரிய வேண்டுதல்களை மேம்படுத்தல் என்பனவாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் 07 முந்திரிகைத் தோட்டங்களையும் 04 இனவிருத்தி நிலையங்களையும், ஒட்டுக்கன்றுகளை உற்பத்தி செய்யும் 07 மத்திய நாற்று மேடைகளையும் 02 மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தும் நிலையங்களையும் 51 சந்தைப்படுத்தல் முகவர்களையும் வலையமைப்பு உள்ளடக்கியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரிகைத் தோட்டங்களின் உற்பத்தி

கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரிகைத் தோட்டங்களின் உற்பத்தி மற்றும் பயிர்ச்செய்களின் அளவு தொடர்பாகாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 6,000 ஏக்கர் காணிகளை உள்ளடக்கிய கொண்டச்சி தோட்டத்தில் மீளப்பயிரிடல் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 மார்ச் வரை 450 ஏக்கர்களில் மரமுந்திரிகைக் கன்றுகள் பயிரிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பயிர்கள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டில் பயிரிட்ட மரமுந்திரிகைக் கன்றுகள் 2017 ஆம் ஆண்டில் விளைச்சலை பிடுங்க கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த விளைச்சலை முறைப்படியாக

களஞ்சியப்படுத்தல் பிடுங்கிய பின்னர் விளைச்சலை உலர்த்துவதற்காக தேவையான வசதிகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) கொண்டச்சி தோட்டத்தில் 4,350 ஏக்கர் விளைதிறனான காணி விளைவற்றுக் காணப்பட்டதுடன் முறைப்படியான திட்டத்தின் கீழ் தேவையான உபகரண மேற்பார்வை உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையாட்களின் எண்ணிக்கையை அதிகரித்து மீண்டும் பயிரிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) புத்தளம் ஆச்சிகே தோட்டத்தில் 960 ஏக்கர் காணியில் 760 ஏக்கர்கள் பயிர்ச்செய்கைக்கு பெருத்தமானதாக உள்ளதுடன் மீளாய்வாண்டில் 14641 கிறாம்கள் நிறை முந்திரிகையான ஆகக்குறைந்த விளைச்சல் கிடைத்திருந்தது புதிய பயிர்ச் செய்கைக்காக 87 ஏக்கர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 673 ஏக்கர் அளவான காணியில் பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய ஒட்டு மரமுந்திரிகைக் .கன்றுகளின் எண்ணிக்கை 53840 ஆக இருந்த போதிலும் தற்பொழுது பயிர்ச் செய்கை பண்ணப்பட்டுள்ள முந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 3286 ஆக இருப்பதனால் 50540 மரமுந்திரிகைக் கன்றுகளை பயிரிடக் கூடிய காணி பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(v) புத்தளம்,கமன்தளுவ மற்றும் ஹாடி தோட்டங்களில் 15,195 எண்ணிக்கையான முந்திரிகை மரங்கள் 30 வருட ஆயுட்காலத்தை கடந்திருந்தால் அவற்றின் விளைச்சல் எலுவன்குளம் தோட்டத்தின் 4.93 கிலோ கிறாம்கள் நிறையுடன் ஒப்பிடுகையில் மாங்கேணி சுதுவதுர.ஆர மற்றும் ஓயாமடுவ தோட்டங்களில் ஒரு மரமுந்திரிகை மரத்தின் விளைச்சல் 02 கிலோ கிராமிற்கு குறைவாக காணப்பட்டது.

(vi) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் புத்தளம் தோட்டங்களில் 800 விதை முந்திரிகைக் கன்றுகளும் 4000 ஒட்டு மரமுந்திரிகை கன்றுகளும் பயிரிடப்பட்டிருந்ததுடன் 2015 புள்ளி விபரத்தின் பிரகாரம் 28 சதவீதமான மரமுந்திரிகைக் கன்றுகள் அழிவடைந்திருந்தன

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குந் சொந்தமான மரமுந்திரிகைத் தோட்டங்களிலுள்ள முந்திரிகை மரங்களை இனங்கண்டு முறைப்படியாக புள்ளி விபர அறிக்கைகள் நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்**

மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையினை விஸ்தரித்தல் மற்றும் தேசிய உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன் நாடு முழுவதும் மரமுந்திரிகை நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் 2000 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை 2,383,620 ஒட்டு மரமுந்திரிகைக் கன்றுகளும் 1,200,640 விதை மரமுந்திரிகைக் கன்றுகளுமாக மொத்தம் 3,584,260 மரமுந்திரிகைக் கன்றுகள் நிவாரண முறைமையின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கடந்த 05 ஆண்டுகளில் மூலதனச் செலவுகளாக ரூபா.62.9 மில்லியன் தொகையும் மீண்டுவரும் செலவுகளாக ரூபா 222 மில்லியன் தொகையும் இதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது. 2013 ஆண்டிற்கு முன்னர் பசளை மானியமாக பணம் வழங்கப்பட்டிருந்நதுடன் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை பசளை மானியமாக ரூபா 16 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அதன் வெற்றித்தன்மை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புத்தளம் மாவட்டத்தின் 09 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 275 விவசாயிகளுக்கு 2014 ஆம் ஆண்டில் 34240 மரமுந்திரிகைக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் 46 சதவீதமானவையும், இரண்டாவது பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அக்கன்றுகளில் 65 சதவீதமானவையும் அழிவுற்றிருந்தன. 2015 ஆம் ஆண்டில் அந்த மாவட்டத்திலேயே 09 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 201 விவசாயிகளுக்கு மரமுந்திரிகைக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் மேற்கொண்ட முதலாவது புள்ளிவிபரக் கணிப்பீட்டில் 31 சதவீதமானவை அழிவடைந்திருந்தன.

(iii) 2014 ஆம் ஆண்டின் போது குருனாகல் மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு 36000 முந்திரிகைக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அக்கன்றுகளில் 58 சதவீதமானவையும் இரண்டாவது பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அக்கன்றுகளில் 71 சதவீதமானவையும் அழிவுற்றிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது 10 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 248

விவசாயிகளுக்கு 28000 மரமுந்திரிகைக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டளவில் அவற்றில் 43 சதவீதமானவை அழிவுற்றிருந்தன.

(iv) 2014 ஆம் ஆண்டின் போது அனுராதபுரம் மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 412 விவசாயிகளுக்கு 32000 கன்றுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இரண்டாவது பரிசோதனை சந்தர்ப்பத்தில் அவற்றில் 9948 கன்றுகள் அல்லது 31 சதவீதமானவை மாத்திரம் எஞ்சியிருந்தன.

(ஈ) புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், ஆராய்ச்சிக்கட்டு, குருணாகல் மாவட்டத்தின் நிகவெரடியா மற்றும் அனுராதபுரம் மாவட்டத்தின் நொச்சியாகமம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் பௌதீகப் பரிசோதனை செய்த மாதிரிகளின் பிரகாரம் அவதானிக்கப்பட் விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) மூன்று விவசாயிகளுக்க வழங்கப்பட்ட 640 கன்றுகளும் அழிவடைந்திருந்ததுடன் 28 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 3120 கன்றுகளில் வெற்றியடைந்த கன்றுகளின் அளவு 824 அல்லது 26 சதவீதமாக இருந்தது.

(ii) பெரும்பாலான முந்திரிகைத் தோட்டங்கள் காடுகளாகியிருந்ததுடன் முறைப்படியாக பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மிருகங்களால் ஏற்படும் அழிவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மரமுந்திரிகைக் கன்றுகளுக்கு இதுவரை 05 ஆண்டுகளை அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் முறைப்படியாக விளைச்சல் கிடைக்கின்ற எதுவித பயிர்ச்செய்கையும் பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மரமுந்திரிகை மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக சிறந்த மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மரமுந்திரிகை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மேற்பார்வையை இலகுபடுத்தும் வகையில் பயிர்நிலங்கள் இல்லாமையின் காரணமாக மேற்பார்வை நடவடிக்கை சிக்கலானதாக காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டில் முந்திரிகை உற்பத்தியின் போது முந்திரிகை 27935 கிலோ கிராம்களாக இருந்ததுடன் ஒரு கிலோ முந்திரிகையின் நிறையில் பழுதடைந்தவை, பருப்பு அல்லாதவை 15 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் எலுவன்குளம், கமன்தளுவ மற்றும் நாலன்தா தோட்டங்களில்

கிடைத்த விளைச்சலின் பழுதடைந்தவை, பருப்பு அல்லாதவை சதவீதம் வெளிக்கள நிறையில் 19 சதவீதத்திலிருந்து 57 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் 30598 கிலோ கிறாம் முந்திரிகைகளை விற்பனை செய்திருந்ததுடன் அவற்றில் 22022 கிலோ கிறாம் தோல் முந்திரிகை மற்றும் 7029 கிலோ கிறாம் முந்திரிகைப் பருப்பு தனியார் தரப்பினர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க வெளியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட முந்திரிகை 11430 கிலோ கிறாம்களாக இருந்ததனால் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்கள் மீளாய்வாண்டில் 20000 கிலோ கிறாம் முந்திரிகை ஆகிய மிகவும் குறைந்த உற்பத்தியினையே அடைந்திருந்தது.

(எ) **ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்**

மீளாய்வாண்டில் கமன்தலுவ மற்றும் புத்தளம் ஆராய்ச்சி நிலையங்களுக்காக ரூபா 4,631,970 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு முன்னர் ஆராய்ச்சிப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் புத்தளம் ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டு ஆராய்ச்சிகளுக்கு மாத்திரம் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) ஆராய்ச்சிகளின் செயல்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யக் கூடிய வகையில் தொடர்ச்சியாகவும் முறைப்படியாகவும் செயல்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) கூட்டுத்தாபனத்தினால் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக பொருத்தமான கணக்கீட்டு மென் பொருள் ஒன்றினை முறைப்படியாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கணக்கீட்டுத் தரவுகள் அனைத்தையும் உள்ளடக்க முடியாத வகையில் மென்பொருட்களைப் பயன்படுத்துவதன் காரணமாக கணனி பரீட்சை மீதி ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பரீட்சை மீதியானது கையால் எழுதும் முறைமையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தனியார் இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு கிலோ கிறாம் தோல் முந்திரிகைக்காக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி ஒரு ரூபா வீதம் அறவிடப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 2,150,000 அறவிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் நானாவித வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

17650 ஏக்கர்கள் கொண்ட 15 தோட்டங்களில் கூட்டுத்தாபனம் மரமுந்திரிகைப் பயிரிட்டுள்ள போதிலும் அத்தோட்டங்களில் 200 ஏக்கர்கள் கொண்ட தோட்டம் விவசாயத் திணைக்களத்திற்கும், 1874 ஏக்கர்கள் கொண்ட 3 தோட்டங்கள் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கும், 15280 ஏக்கர்கள் கொண்ட 6 தோட்டங்கள் அரசாங்கத்திற்கும், 151 ஏக்கர்கள் வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கும், 135 ஏக்கர்கள் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கும், 10 ஏக்கர்கள் கால் நடைகள் அபிவிருத்திச் சபைக்கும் சொந்தமானதாக உள்ளதுடன் அக்காணிகளை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பயன்படுதப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெதகமுவ, புத்தளம் ஆகிய முந்திரிகை செயன்முறைப்படுத்தும் நிலையங்களில் தோல் முந்திரிகைகளை வைப்பதற்குப் பயன்படுத்திய பொயிலர் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டன. இதன் காரணமாக தோல் முந்திரிகைகளை வெட்டும் போது வீண் விரயமாகுதல் அதிகரித்திருந்தன.

(ஆ) நெதகமுவ முந்திரிகை செயன்முறைப்படுத்தும் நிலையத்தில் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாது காணப்பட்ட 16 மோட்டார் சைக்கிள்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவை கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளுக்காக எடுத்துக் கொள்ள முடியாதவையாயின் விற்றுத்தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொண்டச்சி தோட்டத்தில் தோட்ட உத்தியோகத்தர்களின் வாசஸ்தலங்கள், களஞ்சிய பொறுப்பாளர்களினதும் ஊழியர்களினதும் 328 கட்டிடங்கள், பாடசாலைகள் என்பவற்றை உள்ளடக்கிய கட்டிடங்கள் அழிவடைந்துள்ளதுடன் அவற்றில் வாகனம் சேவை செய்யும் நிலையம்,

20,000 லீற்றர்கள் கொண்ட 03 நீர்த்தாங்கிகள் 01 விவசாயக் கிணறு என்பன காணப்பட்டன.

### 4.5 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 224 ஆக உள்ள போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 184 ஆகக் காணப்படுவதனால் 40 வெற்றிடங்கள் காணப்பட்டன. வேலையாளர் மேற்பார்வையாளர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட மிகையாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் 09 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சந்தைப்படுத்தல் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் 2016 ஒக்தோபர் 28ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத் தீர்மானத்தின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளிலுள்ள தகைமைகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று தரத்தில் இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள்.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

கூட்டுத்தாபனத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்காததுடன் 2002 மே 24 ஆந் திகதிய பீஎவ்/பீசு/21 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த வரைபு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட தரவுகளை உள்ளபடியான தரவுகளுடன் ஒப்பிடும் போது 17 விடயங்கள் தொடர்பாக 14 சதவீதத்திலிருந்து 765 சதவீதம் வயையரான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவியணியினருடன் ஒப்பிடும் போது செயற்திட்டப் பிரிவிற்கு அதிகளவு பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) மரமுந்திரிகை தோட்டங்களின் சட்டரீதியான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரிகைத் தோட்டங்களிலிருந்து உச்ச அளவு விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | நெதகமுவ மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தும் நிலையமானது தனியார் தரப்பினர்களிடமிருந்து கொள்வனவு செய்த முந்திரிகை இருப்புக்களை முறையாக ஏடுகளில் பதிவு செய்திருக்கவில்லை. |
| (ஈ) கணக்கீடு | (i) கணக்கீட்டிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருள் முறைமையினை கூட்டுத்தாபனத்திற்குப் பொருந்தும் வகையில் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) ஒன்றித்த பரீட்சை மீதி ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(iii) இலங்கை கணக்கீட்டு நியமனங்களிலிருந்து முரண்பட்டிருத்தல். |

| | |
|---|---|
| (உ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கூட்டுத்தாபனத்தில் மரமுந்திரிகைக் கன்றுகளின் விற்பனையிலிருந்து பெற வேண்டிய கடன் பணத்தை அக்காலப்பகுதிக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**<u>இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதியியல் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (இ) பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற கணக்காய்வாளர் நாயகத்தினால் முன் வைக்கப்பட்ட சிக்கல்களும் அதற்கு கூட்டுத்தாபனத்தின் விளக்கங்களும் அவை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்வு முறைகளும்</u>**

2.2.1 (அ) நடப்பு வருடத்திலிருந்து இங்கே வெளிப்படுத்தப்பட்டவற்றை ஏற்புடைய முறையில் வருடாந்த கணக்குகளில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.2.1 (ஆ) (i) இந்த விடயம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டவற்றை நடப்பு வருட வருடாந்த கணக்கில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.1 (ஆ) (ii) நடப்பு வருடத்திலிருந்து, கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலான வெளிப்படுத்தல்களை வருடாந்த கணக்குகளில் ஏற்புடைய முறையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.1 (ஆ) (iii) இது வெறுமனே கணக்கிய முன்னளிப்பில் ஏற்பட்ட ஒரு தவறாகும், என்பதுடன் இதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டிலோ அல்லது நிதியியல் விளைவளவிலோ எதுவித தாக்கமும் ஏற்படாது. இந்த கணக்காய்வு பந்தியில் குறிப்பிட்டுள்ளது போன்று, எதிர்காலத்தில் வருமானம் மற்றும் செலவினத்தை தனித்தனியாக காட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் ஒன்றுக்கு எதிராக மற்றொன்று ஈடு செய்யப்படமாட்டாது.

2.2.1 (இ) செயன்முறை மற்றும் பெறுமானம் சேர்ப்பு என்பன ஒரு சிக்கலான செயன்முறையாகும். ஆதலினால், இந்த செயன்முறைக்கு பொருந்துகின்ற வகையில் கிரயத்தை கணிப்பீடு செய்வதற்கு பட்டயக் கணக்கறிஞர்களின் நிறுவகத்தின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் மொத்த விற்பனையின் இறுதியில் இலாபத்தை பெறும் நோக்குடன் உற்பத்திகளின் விற்பனை விலையானது சந்தையின் போட்டிக்கு அமைவுற தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவுற 2016 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை விற்பனையின் மூலம் 6.954 மில்லியன் ரூபாய் தேறிய இலாபம் உழைக்கப்பட்டது.

2.2.1 (ஈ) (i) கூட்டுத்தாபனத்தின் சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் என்பனவற்றின் மீதான பெறுமானத் தேய்வானது கணக்கியற் கட்டளைச் சட்டங்களுக்கு அமைவுற கணிப்பீடு செய்யப்பட்டது.

2.2.1 (ஈ) (ii) விளைவளவு மிக்க வாழ் காலத்தை நோக்காகக் கொண்டு, பெறுமானம் மதிப்பீடு திணைக்களத்தின் சம்பந்தப்படலுடன் கூட்டுத்தாபனத்தின் வாகனத் தொகுதிகளாவன பெறுமான மதிப்பீடு செய்யப்பட்டது. ஏற்கனவே ஒரு தொகுதி பெறுமான மதிப்பீட்டு பணி முடிவடைந்து சம்பந்தப்பட்ட அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பெறுமான மதிப்பீட்டு பணி முடிவடைந்தவுடன் இந்த பெறுமான மதிப்பீடுகளை புத்தகங்களில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.1 (ஈ) (iii) இருந்தபோதிலும், 2016 நிதியியல் ஆண்டின் முடிவில் உள்ளவாறாக, சொத்து ஆதனம் மற்றும் கருவிகளின் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு பெறுமதி ஆனது குறிப்பு 1 இன் கீழ் காட்டப்பட்டு அது வருடாந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீளாய்வுட்குட்பட்ட வருடத்தின் தொடக்கத்தில் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு பற்றிய விபரங்கள், மீளாய்வுட்குட்பட்ட வருடத்திற்குரிய பெறுமானத் தேய்வு மற்றும் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்குரிய பெறுமானத் தேய்வு என்பன சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் கூட்டுத்தாபனத்தின் சகல கிரய நிலையங்களையும் கருத்திற்கொண்டு தனித்தனியாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2.1 (உ) (i) (ii) ஊழியர்களிற்கு சேரவேண்டிய நன்மைகளை மதிப்பீடு செய்தல் தொடர்பில் வெளி நிபுணரொருவரின் சேவையை பெற்றுக்கொள்வதில் உள்ள செயல்முறைசார் சிரமம் அதுபோன்று, அவ்விடயத்திற்கு தேவையான நிதியீட்டினை ஒதுக்கீடு செய்வதிலும் சிரமம் உள்ளது. இதனைத் தொடர்ந்து ஊழியர்களுக்கு சேரவேண்டிய நன்மைகளை கணிப்பீடு செய்து, மதிப்பீடு செய்து அதன்பின் அதனைக் கணக்குகளில் சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் ஊழியர்களின் நன்மைகளை கணிப்பீடு செய்தல் தொடர்பில் தகவல்களாவன உச்ச அளவில் முயற்சிகள் எடுக்கப்பட்டு சேகரிக்கப்பட்டன. எவ்வாறாயினும் போதுமானளவில் நிதி வசதிகள் பெற்றுக்கொண்ட பின்னர், இவ் விடயம் தொடர்பில் வெளி நிபுணரொருவரின் சேவை பெற்றுக்கொள்ளப்படும்.

2.3 (அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறுதியீடு செய்யப்படாத மிகுதிகளாவன, போதிய நிதி வசதியில்லாத காரணத்தினால் கொடுப்பனவு செய்யப்படாது முற்கொண்டுவரப்பட்ட மிகுதிகளாகும். போதுமானளவு நிதியம் கிடைக்கப்பெற்றவுடன் இத் தொகைகளை அறுதியீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.3 (ஆ) ரூபாய் 12,389,497.00 (93.64%) எனப்படும் இந்த கடன் தொகையானது, வேறுபட்ட அரச நிறுவனங்களினால் கூட்டுத்தாபனத்திற்கு மரமுந்திரிகை விற்பனை தொடர்பில் செலுத்தப்படவேண்டிய தொகையாகும். கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையான ரூபாய் 13,230,715.00 ஆனது, 3 வருடங்களுக்கும் அதிகமாக கூட்டுத்தாபனத்தினால் அறவிட முடியாது இருக்கும் தொகையாகும். மரமுந்திரிகை செடிகளை விற்றதினால் பெற்றுக்கொள்ளப்படவேண்டியுள்ள இந்த கடன் தொகையை அறவீடு செய்வதற்கு, பல தடவைகள் முயற்சித்த போதிலும் அதுபோன்று, பல நினைவூட்டல்கள் அனுப்பிவைக்கப்பட்டபோதிலும் எதுவும் வெற்றியடையவில்லை. அத்துடன் மேலே கூறப்பட்ட கடன் தொகையான 13,230,715.00 இற்குள் ரூபாய் , உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து பிடித்து வைத்தல் வரி (5.85%) என்ற ரீதியில் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய ரூபாய் 775,133.99 என்ற தொகையும் உள்ளடங்கும். எவ்வாறாயினும் இந்த பிடித்து வைத்தல் வரிகளை அறவிடுதல் செய்தல் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன, என்பதுடன் பிடித்து வைத்தல் வரி அறவிடுகை முயற்சியானது தோல்வியடைந்துள்ளது

2.3 (இ) ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் அறுதியீடு செய்யப்படாத கணக்கியல் மிகுதிகளும் கணக்குகளில் முற்கொண்டுவரப்பட்டுள்ளது. போதுமானளவு நிதியம் கிடைக்கப்பெற்ற பின்பு இந்த மிகுதிகளை அறுதியீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.1 (ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானதும் புத்தளத்தில் உள்ளதுமானதுமான ஆச்சிகேவத்த தோட்டத்துறைக்குரிய வரிப்பணத்தை செலுத்தும்படி கோரி காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட எழுத்திலான கோரிக்கையை தொடர்ந்து சம்பந்தப்பட்ட வரியானது 2016 ஆம் ஆண்டு வரையில் செலுத்தப்பட்டுள்ளது. செலுத்தப்படவேண்டிய வேறு ஏதேனும் வரி என்ற அடிப்படையில் எழுத்திலான கோரிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை.

2.4 (அ) இங்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 05 மதிப்பீட்டு ஆண்டுகள் தொடர்பில் வருமான வரி கூற்றினை தயாரிப்பதற்கு தேவைப்படும் தகவல்களாவன ஏற்கனவே வரி உசாவுத்துணை நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.4 (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவின் பரிந்துரைப்புகளுக்கு அமைவுற பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், கூட்டுத்தாபனமானது விவசாய உற்பத்தியை மட்டுமே மொத்தமாக சார்ந்து இருப்பதினால், பெறுமானம் சேர் வரி மற்றும் தேச நிர்மாண வரி ஆகிய இரு வரிகளிலிருந்து விலக்கு அளிக்கும்படி கோரி ஒரு விரிவான கடிதமானது கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒரு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஒரு நினைவூட்டலும் அனுப்பிவைக்கப்பட்டது. இவ்வாறு இருந்தபோதிலும், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரிச் சட்டங்களை வரையறை செய்யும் ஆணைக்குழுவிற்கு மேற்கூறப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளது என எழுத்தினால் உள்நாட்டு இறைவரி திணைக்களமானது கூட்டுத்தாபனத்திற்கு அறியச் செய்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கை சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் எதுவும் இதுவரையில் தெரியச் செய்யப்படவில்லை.

2.4 (இ) முதலாவது ஒப்பந்தக்காரருக்கு பின்பு தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் அவருக்கு அளிக்கப்பட்ட பணியினை எதுவித சிக்கல்களும் இன்றி சிறப்பாக முடித்ததுடன் அவரது பணி தொடர்பில் இதுவரையில் எதுவித சிக்கல்களும் ஏற்படவில்லை. எவ்வாறாயினும் எதிர்வரும் காலங்களில் நிகழக்கூடிய முயன்று பெறுகை நடவடிக்கைகளின்போது விலை மனுக் கோரலாளர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட அட்டவணைக்கு ஏற்புடைய வகையில் செயலாற்றுகை பிணையங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு இதுவரையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்ட முழுத்தொகையும் செலுத்தப்படவில்லை. 100 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட நிலப்பரப்பினை காடழிப்பு செய்வதற்கு பொருந்திய தொகையில் 75% மும் மற்றும் மிகுதியாகவுள்ள 50 ஏக்கர் நிலப்பரப்பினை காடழிப்பு செய்வதற்கு பொருந்திய தொகையில் 50% மும் இதுவரையில் செலுத்தப்பட்டுள்ளது.

இப்பணி நடைபெறும்போது பல நிலக்கண்ணி வெடிகளாவன இப் பிரதேசத்திலிருந்து அகற்றப்பட்டதுடன் இது தொடர்பில் இராணுவத்தின் குண்டு தகர்ப்பு அலகிற்கும் அறியச்செய்யப்பட்டுள்ளது. மேலும் இக் காடழிப்பு பணி முன்னெடுக்கப்படவேண்டியுள்ள 120 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட ஒரு நிலப்பரப்பில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதா என உறுதி செய்துகொள்வதற்கு புலனாய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், எஞ்சியுள்ள நிலப்பரப்பு தொடர்பில் புலனாய்வுகளை மேற் கொள்வதற்கு கணிசமானளவு காலம் தேவை என்பதினால், முதல்நிலை மட்டத்தில் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு செயற்குழு நியமனம் செய்யப்பட்டதுடன், செயற்குழுவினதும் மற்றும் பணிப்பாளர் சபையினதும் பரிந்துரைப்பின் கீழ் மேற்கூறப்பட்ட முற்பணத் தொகைகளாவன கொடுப்பனவு செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட பிரிவுகளாவன அந்த நிலப்பரப்பில் எதுவித நிலக்கண்ணி அச்சுறுத்தல்களும் இல்லை என்பதை எழுத்தில உறுதிசெய்த பின்னர் இது தொடர்பிலான அளவளாய்வினை செயல்முறைசார்ந்த அடிப்படையில் முன்னெடுப்பதற்கு, முறைசார்ந்த அடிப்படையில் ஒரு செயற்குழு நியமனம் செய்த பின்னரே இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

4.1 (அ) (i) மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குரிய கொண்டச்சி தோட்டத்துறையில் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே100 ஏக்கர்கள், 250 ஏக்கர்கள் மற்றும் 100 ஏக்கர்களில் மரமுந்திரிகை வேளாண்மை முன்னெடுக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் வேளாண்மை செய்யப்பட்ட கூறப்பட்ட இந்த தோட்டத்துறையில் மரமுந்திரிகை தாவரத்தை சுற்றி வட்டமாக களைகளாவன, தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி செய்யப்பட்டதுடன் டிரக்டர்களை பயன்படுத்தி புற்களும் வெட்டி அகற்றப்பட்டன. இப்பணியானது முற்றுமுழுதாக பூரணப்படுத்தப்பட்டதுடன் தற்போது பயிர்செய்கை செய்யப்படுகின்றது.

அத்துடன் எஞ்சியுள்ள வளங்களை பயன்படுத்தி, 2015 ஆம் ஆண்டில் வேளாண்மை செய்யப்பட்ட 250 ஏக்கர் நிலப்பரப்பிலும் களையகற்றல் பணி முன்னெடுக்கப்பட்டு தற்போது செய்யப்பட்டுக்கொண்டு வருகிறது. நிச்சயமாக கதிரறுப்பு செய்யப்படுவதற்கு முன்பு களையகற்றல் பணி பூரணப்படுத்தப்படும்.

அத்துடன், 2016 ஆம் ஆண்டில் வேளாண்மை செய்யப்பட்ட 100 ஏக்கர் விஸ்தீரணத்தை கொண்ட நிலப்பரப்பு தொகுதிகளில், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி வட்ட களையகற்றுகையானது முன்னெடுக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் டிரக்டர்களின் உதவியுடன் களத்தில் களையகற்றுகை பணியானது முன்னெடுக்கப்படும்.

4.1 (அ) (ii) இந்த மரமுந்திரிகை தாவரங்களின் பயிர்ச்செய்கையானது 2014 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும் 2015 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் செய்யப்பட்டதுடன் இதன் வர்த்தக ரீதியிலான விளைச்சலானது 2019–2020 ஆம் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படல் முடியும். அதுவரையிலும் களஞ்சியப்படுத்தல் வசதிகளுடன் ஏனைய வசதிகளாவன ஏற்பாடு செய்யப்படும்.

4.1 (அ) (iii) இந்தத் தோட்டத்துறையில் 4000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு கருத்திட்டத்தை அரச – தனியார் பங்குடமையின் கீழ் அமுல்படுத்துகை செய்வதற்கு ஏற்கனவே அமைச்சரவையிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. கூறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவுற எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

4.1 (அ) (iv) புத்தளத்திலுள்ள ஆச்சிகேவத்த தோட்டத்துறையில் 200 ஏக்கர் விஸ்தீரணத்தை நிலப்பரப்பானது சரளைக்கற்கள் நிரம்பிய ஒரு பிரதேசமாக இருப்பதினால் அது வேளாண்மைக்கு உதவாத நிலமாக இனம் காணப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நிலப்பரப்பில் 70 ஏக்கர் நிலப்பரப்பானது புதிதாக பயிர்ச்செய்கை செய்யப்பட தொடங்கப்பட்டுள்ளது. அதே வேளையில் நடப்பு வருடத்தில் 100 ஏக்கர் விஸ்தீரணத்தை கொண்ட நிலப்பரப்பு தொகுதிகளில் புதிய பயிர் நடுகைகள் செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இதைவிட நடப்பு வருடத்தில், தோட்டத்துறைகளில் 500 ஏக்கர் விஸ்தீரணத்தை கொண்ட நிலப்பரப்பு தொகுதிகளில் இடைத்தாவர வளர்ப்புகளை முன்னெடுப்பதற்கு புற ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான திட்டங்களையும் கூட்டுத்தாபனம் வகுத்துள்ளது.

4.1 (அ) (v) எலுவாய்குளம் தோட்டத்துறையானது அதனது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்தே உயர் விளைச்சலை தரக்கூடிய ஒட்டு மரமுந்திரிகை தாவர

வகைகளினையும் சிறந்த விவசாய செயன்முறைகளையும் பயன்படுத்தி பயிர்ச்செய்கை செய்யப்படுகிறது. இதற்கமைவுற, இந்த தோட்டத்துறையின் விளைச்சலானது ஏனைய தோட்டத்துறைகளுடன் ஒப்பிடும்போது அதிகமாகும்.

4.1. (அ) (vi) புத்தளத்திலுள்ள ஆச்சிகேவத்தையில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட கணிப்பீடுகளுக்கு அமைவுற 28% மான மரமுந்திரிகை செடிகளாவன எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழலியல் காரணிகளின் காரணமாக அழிக்கப்பட்டுள்ளன. மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை பொறுத்தவரையில் 72% மானவையே விளைச்சலை தந்துள்ளது. எவ்வாறாயினும் மரமுந்திரிகை அழிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்நடுகை செய்யப்படுதற்கு வருடகாலப் பகுதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4.1 (ஆ) கூட்டுத்தாபனத்தின் தோட்டத்துறைகளில் பேணி வளர்க்கப்படும் மரமுந்திரிகை தாவரங்கள் தொடர்பில் முறைசார் கணிப்பீடுகள் செய்யப்பட்டதுடன் அறிக்கைகளும் பேணப்படுகின்றன. எவ்வாறாயினும், வருடகாலப் பகுதியில் ஒவ்வொரு மரத்திற்கும் இலக்கமிட்டு அறிக்கைகள் பேணப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4.1 (இ) (i) – (iv) மற்றும் 4.1 (ஈ) (i) – (iv)

மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்குகந்த காலநிலை நிலவும் 19 மாவட்டங்களில் மரமுந்திரிகை மானிய நிகழ்ச்சித்திட்டமானது அமுல்படுத்துகை செய்யப்படுகின்றது. இந்த மானிய நிகழ்ச்சித் திட்டமானது பல வருட காலமாக தொடர்ந்து நடாத்தப்பட்டு வந்த போதிலும், இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் யாவற்றினதும் வெற்றியின் வீதமானது அதனது தோட்டத்துறைகளில் எஞ்சியுள்ள மரமுந்திரிகை தாவரங்களின் அடிப்படையில் நோக்கின் அது 35% - 40% என்றே கூறலாம். இந்த மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியின் வீழ்ச்சிக்கு பின்வரும் காரணிகள் நேரடி பங்களிப்பாக அமையும்.

1. வறட்சி மற்றும் மரமுந்திரிகை தரவரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் உள்ள சிரமம் என்பனவற்றின் காரணமாக, பெருந்தொகையான எண்ணிக்கையான மரமுந்திரிகை தாவரங்கள் வாடி இறக்கின்றன.

2. கால ஓட்டத்திற்கு அமைய, மரமுந்திரிகை மானிய பெறுநர்கள் இந்த விடயத்தில் காட்டும் அக்கறையின்மையும் அசமந்த போக்கும். இதன் காரணமாக, மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறிய நிலங்களுக்கு மரமுந்திரிகை தாவரங்கள் வழங்கப்படுகின்றமை. “அரை ஏக்கர்களை உடைய நிலப்பரப்பாகும்”

3. தாவரத்திற்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காலநிலை மற்றும் சூழலியல் காரணிகள்.

4. காட்டு விலங்குகளால் தாவரத்திற்கு ஏற்படக்கூடிய சேதங்கள்.

5. எதிர்பாராதவாறு தீயினால் ஏற்படக்கூடிய சேதங்கள்.

6. மரமுந்திரிகை மரங்களாவன விளைச்சலை தருவதற்கு நீண்ட காலத்தை எடுப்பதனால், மானியப் பயனாளர்கள் அத்தகைய பயிரச் செய்கையிலுள்ள தமது ஆர்வத்தை கைவிட்டு விடுவதுடன், குறுங் காலத்தில் பயன் தரக்கூடிய தாவரப் பயிர்ச்செய்கையில் தமது ஆர்வத்தை செலுத்துகின்றனர்.

7. அதிக பயனுள்ள வகையில் வழங்கப்படும் மானியத்திட்டத்திற்குரிய பயிர்ச்செய்கையினை செய்வதற்கு முற்படல். இதன் காரணமாக காலப்போக்கில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையானது கைவிடப் பட்டதாகின்றது.

8. மானியப் பயனாளிகளினை பாதிக்கின்ற ஏனைய தனிப்பட்ட காரணிகள்.

   மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரிவான விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் நடப்பு வருடத்திலிருந்து (2017 ஆம் ஆண்டிலிருந்து) கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு முன்னுரிமை வழங்கி மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மானிய நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துகை செய்வதற்கு, 2017. 03.31 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப் பட்டது.

   1. முப்படையணியினரின் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலும் மற்றும், சிவில் பாதுகாப்பு திணைக்களம் அமைந்துள்ள பிரதேசத்திலும் உள்ள நிலங்களில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான நிலங்கள்.

2. திறந்த வெளி சிறைச்சாலை முகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான நிலங்கள்.

3. பௌத்த விகாரைகள், கத்தோலிக்க பள்ளிகள், இந்து கோவில்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்கள் ஆகியவற்றிற்கு சொந்தமான நிலங்களில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான நிலங்கள்.

4. அரச பள்ளிக்கூடங்கள் அமைந்துள்ள இடங்களில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான இடங்கள்.

இந்த முறையினை சேர்ப்பதன் மூலம் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை வளர்ப்புக்கு தேவைப்படக்கூடிய பௌதிக மற்றும் மனித வளங்களை போதுமானளவில் பெற்றுக்கொள்ளலாம் என நம்பப்படுகிறது. எவ்வாறாயினும் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சாத்தியமாகிய 50% இனை நடப்பு வருடத்தில் விஞ்சுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வருடங்களில் சாத்தியமடைதல் வீதமானது 75% இனை விஞ்சுவதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது.

4.1 (உ) தரத்தினை விட குறைவான மற்றும் வறல் காலநிலை நிபந்தனைகள். களத்தில் நிறை கணிப்பீடு செய்யப்படும் பச்சை மரமுந்திரிகைகளின் நிறையானது, அழுகல் நிலை, வெறுமை மற்றும் ஈர நிலை ஆகியவற்றின் காரணமாக இறுதியில் 15% இனால் குறையும். எவ்வாறாயினும் ஈர நிறைக்கு இருக்கக்கூடிய வழமையான வீத அளவினை குறைத்தலானது செய்வதற்கு இயலாது இருப்பதற்கு காரணமாக அமைவது, தவிர்க்கமுடியாத மழைக் காலமாகும். 2016 ஆம் ஆண்டில் கதிரறுப்பு செய்யப்படும் காலத்தில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஏற்பட்ட மழை வீழ்ச்சி இறுதியில் வெள்ளப்பெருக்கில் முடிவடைந்தது.

இதற்கமைவுற, இத்தகைய சூழ்நிலைகளில் அழுகல், வெறுமை மற்றும் ஈர நிலை ஆகியவை தொடர்பில் ஏற்படும் விரய வீத அதிகரிப்பானது தவிர்க்க முடியாததாகும்.
மேற்கூறப்பட்ட விடயமானது மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற கணக்காய்வு முகாமைத்துவ ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபைக்கும் இது தொடர்பில் உரிய முறையில் அறிக்கை செய்யப்பட்டது.

4.1 (ஊ) வேறுபட்ட சூழலியல் காரணிகளின் காரணமாக, குறிப்பாக மரமுந்திரிகை கதிரறுப்பு காலப்பகுதியில் நாடெங்கிலும் நிலவும் உயர் மழை வீழ்ச்சியின் காரணமாக, 2016 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை கதிரறுப்பில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கூட்டுத்தாபனத்திட மிருந்து பெறப்படுகின்ற பச்சை மரமுந்திரிகைகளாவன உற்பத்தி செயன் முறையை தொடர்ச்சியாக கொண்டுசெல்வதற்கும் அத்துடன் மரமுந்திரிகைகளை கோரி பெறப்படும் கட்டளைகளை ஏற்றுக்கொள்ளவும் போதாமையாக இருந்த காரணத்தினால், வெளி விநியோகத்தர்களிடமிருந்து பச்சை மரமுந்திரிகைகளை கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கு காரணம், உயர் மழையின் காரணமாக மரமுந்திரிகை விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். (அழுகிய, வெறுமையான மரமுந்திரிகைகள்).

அத்துடன், உற்பத்தி செயன்முறை நிலையங்களில் மரமுந்திரிகை வழங்கலில் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக, உற்பத்தி செயன்முறை பணியானது தடங்கலுக்கு உட்பட அந்நிலையங்களில் பணியாற்றிய ஊழியர்களின் பணியானது இடர்வரவு நிலைக்கு உட்பட்டதினால் அவர்கள் அந்தப் பணியினை கைவிட்டுவிட்டு வேறு பணிகளை நாடிச் சென்றதினால் மீண்டும் உற்பத்தி செயன்முறையினை முன்னெடுத்துச் செல்லவேண்டிய சூழ்நிலைகளில் புதிதாக தொழிலாளர்களை தேடலானது சிரமமாகின்றது. இத்தகைய ரீதியில் உற்பத்தி செயன்முறைக்கு தாக்கம் ஏற்படாது இருப்பதற்கு வெளி விநியோகத்தர்களிடமிருந்து மிகை மரமுந்திரிகை கொள்வனவு செய்யப்படலானது கட்டாயப்படுத்தப்பட்டதொன்றாகிறது.

எவ்வாறாயினும் மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் தோட்டத்துறைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட 100,000 கிலோ கிராம் பச்சை மரமுந்திரிகைகளை செயன்முறையாக்கம் செய்ததிலிருந்து கிட்டத்தட்ட 20,000 கிலோ கிராம் மரமுந்திரிகை பருப்புகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

அத்துடன், மேலே குறிப்பிட்டது போன்று மரமுந்திரிகைகளுக்கு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகளுக்கு மரமுந்திரிகைகளை வழங்கவேண்டிய தேவை இருப்பதினால், தேவைக்கு ஏற்றால் போன்று, பச்சை மரமுந்திரிகைகளையும் அதுபோன்று மரமுந்திரிகை பருப்புகளையும் வெளி விநியோகத்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யவேண்டியதாயிற்று.

4.1 (எ) (i) (ii) முன்வைக்கப்பட்ட சகல ஆராய்ச்சி பிரேரணைகளும் ஆராய்ச்சி பணிகளும் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்டத்துறை முகாமைத்துவ பீடத்தில் உயர் பதவியினை வகிக்கும் அலுவலர்களின் சம்மந்தப்படலுடன் செயற்படுத்துகை செய்யப்படுகின்ற மரமுந்திரிகை ஆராய்ச்சி குழுவினரால், சகல ஆராய்ச்சி பிரேரணைகளும் பணிகளும் அனுமதிக்கப்பட்டதுடன் செயற்குழு அறிக்கையானது பணிப்பாளர் சபைக்கும் முன்வைக்கப்பட்டது. சகல ஆராய்ச்சி பணிகளினதும் வளர்ச்சியானது, முறைசார்ந்த முறையில் தொடர்ச்சியாக, மரமுந்திரிகை ஆராய்ச்சி முகாமைத்துவ செயற்குழுவினால் காலாண்டு அடிப்படையில் மேற்பார்வை செய்யப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில், கணக்காய்வு பந்தியினை இலக்கமிடுவதில் ஒரு தவறு நேர்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது என்பதுடன், கணக்காய்வு பந்திகளாவன, 4.1 என்ற இலக்கத்தின் கீழ் இரு தடவைகள் முன்வைப்பு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையில் இலக்கமிடல் தொடர்பில் எதுவித மாற்றங்களும் செய்ய இயலாத காரணத்தினால் கணக்காய்வு நாயகத்தின் அறிக்கைக்கு முன்வைக்கப்பட்ட பதில்கள் அடங்கிய அறிக்கையும் இதே விதத்தில் இலக்கமிடப்பட்டுள்ளது.

4.1 (அ) கூறப்பட்ட கணிணியை, செல்லுபடியாகக்கூடிய உத்தரவுப்பத்திரத்துடன், தன்னியக்கமாக இயங்கக்கூடிய கொள்வனவு மற்றும் விற்பனை முறையில் இணைப்பதனூடாக நவீனமயப்படுத்துகை மற்றும் இற்றைப்படுத்துகை செய்வதற்கு தேவையான கிரயம் தொடர்பில் நடப்பு வருடத்தில் எதுவித ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலினால், கூறப்பட்ட கணிணியின் மென்பொருளினை நவீனமயப்படுத்துகை மற்றும் இற்றைப்படுத்துகை செய்து பூரணப்படுத்துகை செய்தலானது, 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

4.1 (ஆ) இறக்குமதியாளர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணத்தின் இலக்கானது, பச்சை மரமுந்திரிகை இறக்குமதி தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட முகாமைத்துவ மற்றும் நிர்வாக செலவினத்தை இறக்குமதியாளர்களிடமிருந்து அறவிடுதல் ஆகும் என்பதுடன் அறவிடப்பட்ட அத்தொகையானது, இங்கு குறிப்பிட்டது போன்று நானாவித வருமானக் கணக்கில் பதியப்படும்.

4.2 கணக்காய்வு பந்தியில் குறிப்பிட்டுள்ள, தோட்டத்துறைகள்/தாவர வளர்ப்பு நிலையங்கள் ஆகியவற்றின் சட்டரீதியிலான உரிமையை முறைசார்ந்த ரீதியில் பெற்றுக்கொள்வதற்கு, நேர் அமைச்சுடன் கூட்டிணைந்து கூட்டுத்தாபனமானது தற்போது உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றது. இவ்விடயம் தொடர்பில் ஏற்கனவே ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனமானது நேர் அமைச்சினூடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்களின் சட்ட ரீதியிலான உரிமையை பெற்றுக்கொள்வதில் பின்பற்றப்படவேண்டிய செயன்முறைகள் தொடர்பில் கணிசமானளவு காலம் செலவிடப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் தற்போதுவரை நோக்கின், எலுவாம்குளம் தோட்டத்துறையின் உரிமையினை சட்டரீதியாக கூட்டுத்தாபனத்திற்கு மாற்றும் செயன்முறையானது இறுதிக் கட்டத்திலுள்ளது.

4.3 (அ) முதலில் இங்கு குறிப்பிடப்படவேண்டியது, பச்சை மரமுந்திரிகைகளை வெட்டும்போது எதுவித விரயங்களும் ஏற்படவில்லை. ஏனெனில் அவை வெயிலில் காயவைக்கப்படுகின்றதே ஒழிய கொதிநீராவி கலனின் உதவியுடன் அவிக்கப்படுவதில்லை.

எவ்வாறாயினும், பச்சை மரமுந்திரிகைகள் இவ்வாறு வெட்டும்போது அதில் பெறப்படும் முழு முந்திரிகை பருப்பு அளவின் வீதத்தில் ஒரு சிறிய வீழ்ச்சி ஏற்படும். கொதிநீராவி கலன்களினை பாவிக்காது விட்டாலும் மரமுந்திரிகைகளின் அளவு மற்றும் களத்தில் உள்ளபோது மரமுந்திரிகையை தாக்கும் சூழலியல் காரணிகள் என்பன இதற்கு காரணமாக அமையும்.

அத்துடன் நெதகமுவ செயன்முறை நிலையத்திலுள்ள கொதிநீராவிக் கலனானது சிறந்த முறையில் அமைக்கப்பட்ட ஒன்றாகும் என்பதுடன் இதிலுள்ள பிரச்சனையினை திருத்தும் பொருட்டு விலைப்புள்ளிகளாவன கோரப்பட்ட போதிலும் அந்த குறையினை திருத்துவதற்குரிய தகைமையும் பொறுப்பும் உடைய நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகளை பெறுதல் செயல்முறை சாத்தியத்தில் சிரமம்மிக்கதொன்றாக உள்ளது. எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன என்பதுடன் இயலுமானவரையில் விரைவில் இந்த திருத்தப்பணியினை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் இங்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள புத்தளம் செயன்முறை நிலையத்திலுள்ள கொதிநீராவிக் கலன் முறைமையானது 24 வருடங்களுக்கு முன்பு தாபிக்கப்பட்டதொன்று என்பதுடன் அதில் தற்போது, நீர் பயணிக்கும் குழாயானது துருப்பிடித்திருத்தல், மரமுந்திரிகை பயணிக்கும் நீண்ட வழியானது பழுதடைந்திருத்தல், நீர் நிறைந்துள்ள தாங்கி துருப்பிடித்திருத்தல், மின்சார விநியோக செயற்பாட்டு முறையில் தடங்கல் ஏற்படல் போன்ற பல பிரச்சனைகள் காணப்படுகின்றன.

கொதிகலன் நீராவி முறைமையானது ஒரு தொழில்நுட்பவியலாளரினால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அதனை பரிசோதித்த தொழில்நுட்ப வியலாளரின் கருத்தானது, இந்த கொதிகலன் நீராவியினை திருத்திப் பாவிப்பதற்கு பதிலாக புதிதாக ஒன்றை கொள்வனவு செய்தலானது கூட்டுத்தாபனத்திற்கு இலாபமாகும் என்பதாகும்.

ஆதலினால் மேற்கூறப்பட்ட கொதிகலனின் தற்போதைய நிலையினை கருத்திற்கொண்டு புதிதாக ஒரு கொதிகலனை கொள்வனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பெறுமான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

4.3 (ஆ) இங்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சகல மோட்டார் வாகனங்களும் நெதகமுவ செயன்முறை நிலையத்தினால் கூட்டுத்தாபனத்தின் வெளி அலுவலகங்களிடமிருந்து காலத்திற்கு காலம் அவ்வப்போது அகற்றப்படுதலின் பொருட்டு பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பதுடன் இவை செயன்முறை வளாக நிலையங்களில் பாதுகாப்பாக வெயிலிலோ மழையினாலோ எதுவித சேதமும் ஏற்படாத வகையில் வைக்கப்பட்டுள்ளன.

அகற்றப்படும் பொருட்டு செயன்முறை நிலையங்களினால் முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் வாகனங்களில் 02 இனைத் தவிர (மோட்டார் வாகனம் பதிவு இலக்கங்கள் 144-3134 மற்றும் 144-3141) ஏனையவை விற்கப்பட்டுவிட்டன என்பதுடன் இந்த குறிப்பிட்ட இரண்டு வாகனங்களும் உச்ச அளவில் பழுதடைந்து இருந்ததினால் விற்கப்படமுடியாத நிலையில் உள்ளன. மேற்கூறப்பட்ட மோட்டார் வாகன விற்பனையின் பின்னரே, கணக்காய்வில் குறிப்பீடு செய்யப்பட்டிருந்த 16 மோட்டார் சைக்கிள்களில் 14 மோட்டார் சைக்கிள்களாவன பெற்றுக்கொள்ளப்பட்டன.

முன்னர் குறிப்பிட்ட 14 மோட்டார் சைக்கிள்களில் அநேகமானவை, கடந்த வருடத்தின் நடுவில் அல்லது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் பெற்றுக் கொள்ளப்பட்டது. பொதுவாக, மோட்டார் சைக்கிள்களாவன விலை மனுக் கோரல்களின் மூலம் அகற்றப்படுதற்கு கணிசமானளவு எண்ணிக்கையான மோட்டார் சைக்கிள்கள் சேர வேண்டும். இதற்கமைய கணிசமானளவு மோட்டார் சைக்கிள்கள் சேர்ந்துள்ளமையினால் எதிர்காலத்தில் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

4.3 (இ) தற்போது பாவிக்கப்படும் கட்டிடமானது தீவிரவாதிகளின் தாக்குதலின் காரணமாக அழிந்ததுடன் தற்போது புனருத்தாபனம் செய்யப்படுகின்றது. அத்துடன் இன்னும் இரு கட்டிடங்களினதும் திருத்தற்பணி தொடங்கப்பட்டு செய்யப்படுகின்றது. ஏனைய கட்டிடங்களை படிப்படியாக தேவைக்கு அமைவுற உளதாயிருக்கும் நிதியங்களிற்கு ஏற்ப எதிர்காலத்தில் திருத்தற்பணி செய்யப்படும்.

4.4 (அ) தோட்டத்துறையில் பணியானது தொடர்ச்சியாக நடைபெறுதலினை உறுதி செய்யும் பொருட்டு, இந்த கணக்காய்வு பந்தியில் குறிப்பிட்டது போன்று, தொழிலாளி, கண்காணிப்பாளர் பதவிக்கு இரண்டு நபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்கள். கூறப்பட்ட பதவிக்கான அனுமதியானது நேர் அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

4.4. (ஆ) முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டதை தொடர்ந்து கூட்டுத்தாபனத்தின் முன்னைய முகாமையாளரின் ஒழுக்காற்று செயற்பாடுகளாவன முறைகேடுடையது என்று நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து சபைப் பணிப்பாளர்களின் தீர்மானத்திற்கு அமைவுற அவர், 2015.04.20 ஆம் திகதியிலிருந்து விற்பனை மேம்படுத்துகை அலுவலராக பதவி இறக்கம் செய்யப்பட்டார். இவர் மீது சட்ட நடவடிக்கை தொடங்கப்படுவதற்கு இருந்ததினால், இவர் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து கடமைக்கு அறிக்கை செய்யவில்லை. ஆதலினால் கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை மேம்படுத்துகை அலுவலர் பதவியானது வெற்றிடமாக உள்ளது.

அதன் பின்பு இப்பணிக்கிருந்த அதீத அவசியத்தன்மை மற்றும் கூட்டுத்தாபனத்தின் விற்பனை மேம்படுத்துகையில் இருக்கப்படவேண்டிய தேவைப்பாட்டையும் கருதி ஒரு சிரேட்ட பெண் அலுவலர் இந்த விற்பனை மேம்படுத்துகை பதவிக்கு முறை சார் நேர்முக பரீட்சையின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். பணிப்பாளர் சபையின்

பரிந்துரைப்புகளின் கீழ், மேலதிகமாக ஒரு விற்பனை மேம்படுத்துகை அலுவலர் பதவிக்கு ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெறப்படவுள்ளது.

4.4 (இ) தற்போது கூட்டுத்தாபனத்தின் சகல நிறைவேற்று அதிகாரிகளும் ஆட்சேர்ப்பு அனுமதி திட்டம் மற்றும் பதவி உயர்வு அனுமதி திட்டம் ஆகியவற்றில் கோரப்பட்டுள்ள தகைமைகளை திருப்திகரமாக பூரணப் படுத்துகின்றனர்.

5.1 2004 மற்றும் 2015 ஆம் ஆண்டுக்குரியதாய் தயாரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகளாவன, அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதிக்காக சமர்ப்பிக்கும்படி கோரி நேர் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. அந்த அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து உடனடியாக சம்பந்தப்பட்ட வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5.2 உண்மையான வருமானம் மற்றும் செலவினத்தை, பாதீட்டு அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்துபார்த்து அதன்பின்பு செலவினக் கட்டுப்பாடு முன்னெடுக்கப்படும்.

6 (அ) – (உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விரிவான கருத்துரைகளும் எடுக்கப்படவேண்டிய தீர்வு நடவடிக்கைகளும் தொடர்பில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும்.

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

### ஐந்து வருட பொழிப்பு

| இலாப நட்ட கணக்கு | 2016 ரூபாய் | 2015 ரூபாய் | 2014 ரூபாய் | 2013 ரூபாய் | 2012 ரூபாய் |
|---|---|---|---|---|---|
| தேறிய விற்பனை | 94,906 | 75,297 | 115,370 | 134,180 | 150,107 |
| விற்பனையின் கொள்முதல் | (68,648) | (55,055) | (62,376) | (82,586) | (59,939) |
| **மொத்த இலாபம்** | **26,258** | **20,242** | **52,994** | **51,594** | **90,168** |
| ஏனைய வருமானம் | 28,224 | 13,974 | 4,219 | 10,494 | 1,846 |
| நடப்பு மானியம் | 16,923 | 27,798 | 21,235 | 22,775 | 25,910 |
| நிர்வாக செலவினம் | (39,141) | (44,001) | (53,396) | (43,493) | (44,455) |
| கடன் தீர்வு | (634) | (992) | (3,283) | (3,045) | (3,715) |
| **வர்த்தக துறையிலிருந்து தேறிய இலாபம்** | **31,630** | **17,021** | **21,769** | **38,325** | **69,754** |
| **வருமானத்தை விஞ்சிய செலவினம் சேவைத் துறையிலிருந்து** | **(68,155)** | **(64,749)** | **(47,826)** | **(37,358)** | **(25,520)** |
| **தேறிய இலாபம்/நட்டம்** | **(36,525)** | **(47,728)** | **(26,057)** | **967** | **44,234** |
| **ஐந்தொகை** | | | | | |
| **நடப்பல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் | 100,869 | 110,208 | 77,005 | 63,916 | 64,986 |
| முதிர்ச்சியுற்ற பரப்பெல்லை செலவினம் | 29,303 | 31,442 | 35,141 | 30,466 | 31,620 |
| மூலதன நடைமுறை வேலை | - | - | 1,046 | 215 | - |
| முதிர்ச்சியில்லா பரப்பெல்லை செலவினம் | 41,362 | 33,243 | 25,853 | 29,288 | 19,982 |
| ஏனைய சிறு கருத்திட்டங்கள் | 949 | 806 | 615 | 619 | 707 |
| **மொத்த நடப்பல்லாத சொத்துக்கள்** | **172,483** | **175,699** | **139,660** | **124,504** | **117,295** |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்பு | 28,916 | 30,131 | 48,712 | 29,460 | 46,135 |
| வியாபார கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுகைகள் | 20,798 | 24,411 | 24,843 | 60,042 | 70,822 |
| முற்பணம் | 4,841 | 4,287 | 10,080 | 5,461 | 3,374 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 7,874 | 38,846 | 60,879 | 66,529 | 28,676 |
| **மொத்த நடப்புச் சொத்துக்கள்** | **62,429** | **97,675** | **144,514** | **161,492** | **149,007** |
| **மொத்த சொத்துக்கள்** | **234,912** | **273,374** | **284,174** | **285,996** | **266,302** |
| **உரிமையாண்மையும் பொறுப்புகளும்** | | | | | |
| **உரிமையாண்மை** | | | | | |
| முதல்நிலை மூலதனம் | 40,000 | 40,000 | 40,000 | 40,000 | 40,000 |
| அரச மானியம் | 123,860 | 114,881 | 78,957 | 58,745 | 34,959 |
| ஏனைய நபர்களிடமிருந்து மானியம் | 18,530 | 18,917 | 19,304 | 19,691 | 17,911 |
| மூலதன ஒதுக்கீடுகள் | 17,442 | 17,442 | 22,215 | 22,241 | 23,676 |
| இலாப நட்ட கணக்கு | (27,975) | 8,550 | 56,278 | 81,339 | 77,788 |
| **மொத்த உரிமையாண்மை** | **171,857** | **199,790** | **216,754** | **222,016** | **194,334** |
| **நடப்பல்லாத பொறுப்புகள்** | | | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 40,060 | 52,471 | 42,415 | 33,875 | 31,272 |
| வாகனக் குத்தகை | - | - | - | 3,257 | 6,513 |
| **மொத்த நடப்பல்லா பரிப்புக்கள்** | **40,060** | **52,471** | **42,415** | **37,132** | **37,785** |
| **நடப்புப் பரிப்புக்கள்** | | | | | |
| வியாபார கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய பெறுகைகள் | 22,995 | 21,113 | 25,005 | 26,849 | 34,183 |
| **மொத்த நடப்புப் பரிப்புக்கள்** | **22,995** | **21,113** | **25,005** | **26,849** | **34,183** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்** | **234,912** | **273,374** | **284,174** | **285,997** | **266,302** |
| தேறிய சொத்துக்களில் வரும்படி % | (21.3) | (23.9) | (12.0) | 0.4 | 22.8 |
| தேறிய இலாப விகிதம் % | (38.5) | (63.4) | (22.6) | 0.7 | 29.5 |
| நடப்பு விகிதம் Times | 2.7 | 4.6 | 5.8 | 6.0 | 4.4 |
| விரைவாக காசாக மாற்றக்கூடிய சொத்து விகிதம் Times | 1.5 | 3.2 | 3.8 | 4.9 | 3.0 |
| மொத்த செலவினத்திற்கு மொத்த வருமானம் | 0.8 | 0.8 | 0.9 | 1.0 | 1.3 |